SAKTHI MARKETING
வாடிக்கையாளர்களின் நன் மதிப்பை பெற்ற நிறுவனம்
பெட்ரோல், டீசல், சர்வோ ஆயில் சில்லரை விற்பனை நிலையம்
இண்டியன்ஆயில் IndianOil
#41/B, Sabanayagar Street, Chidambaram-1.
Ph: 04144-223177, Cell: 98423 35007

# மாலை எக்ஸ்பிரஸ்

MAALAI EXPRESS

மாநிலம் பயனுற!

குரோதி வருடம் பங்குனி 12 | ஹிஜிரி 1446 ரமலான் 25

Email: maalaiexpresspdy@gmail.com
Website: www.maalaiexpress.com

/maalaiexpressnews

● புதுச்சேரி ● புதன்கிழமை, மார்ச் 26, 2025 ● வெளியீடு: 27-3-2025, வியாழக்கிழமை RNI.REG.NO.PONBIL/2015/68788 ● Volume - 10 ● Issue - 250 ● 8 பக்கம் ● ரூ.6

மல்டிகலர் பைகள்



துணிக்கடை, நகைக்கடை, திருமண மற்றும் சுபவிசேஷங்களுக்கு அனைத்து விதமான மாடல்களிலும் சிறந்த முறையில் பைகள் தைத்துதரப்படும்.
தொடர்புக்கு:-
98423 35007

## அறந்தாங்கி தொகுதி ஆவுடையார்கோவில்

# தீயணைப்பு நிலையத்துக்கு புதிய கட்டிடம்

### சட்டசபையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு



**சென்னை, மார்ச் 26–**

தமிழக சட்டசபையில் இன்றைய அலுவல்கள் தொடங்கின. உறுப்பினர்களின் கேள்விக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிலளித்து வருகிறார். அப்போது உறுப்பினர் ராமச்சந்திரன் எழுப்பிய கேள்விக்கு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:

அறந்தாங்கி தொகுதி ஆவுடையார்கோவில் தீயணைப்பு, மீட்பு பணிகள் நிலையத்துக்கு புதிய கட்டிடம் கட்டப்படும். ஆவுடையார்கோவில் தீயணைப்பு நிலையத்துக்கு ரூ.2.59 கோடி நிதி ஒதுக்கப்பட்டு மே மாதம் பணிகள் தொடங்கும். ஆவுடையார்கோவில் தீயணைப்பு நிலைய புதிய கட்டுமான பணி அடுத்தாண்டு பிப்ரவரியில் முடிக்கப்படும். அயப்பாக்கத்தில் புதிய தீயணைப்பு நிலையம் அமைப்பதற்கான அவசியம் ஏற்படவில்லை. அறந்தாங்கி காவல் நிலையத்தை 2ஆக பிரித்து புதிய காவல்நிலையம் அமைப்பதற்கான அவசியம் இல்லை. தி.மு.க. ஆட்சி பொறுப்பேற்று 72 காவல் நிலையங்கள், 23 தீயணைப்பு நிலையங்கள் திறக்கப்பட்டுள்ளன என்றார்.

## பாம்பன் புதிய ரெயில் பாலம் திறப்பு: 6ம் தேதி தமிழகம் வருகிறார் பிரதமர் மோடி



**சென்னை, மார்ச் 26–**

பழைய பாம்பன் பாலம் 1914ம் ஆண்டு திறக்கப்பட்டது. இந்தப் பாலத்தின் வழியே நடைபெற்ற போக்குவரத்தின் வாயிலாக ராமேசுவரம் வரும் சுற்றுலாப் பயணிகளின் வருகை நாளுக்கு நாள் அதிகரித்தது. கடலுக்கு நடுவில் இருந்த பழைய பாலத்தில் 40 கிலோ மீட்டர் முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் ரெயில்கள் இயக்கப்பட்டது.

இதற்கிடையே, பாம்பன் ரெயில் பாலம் 110 ஆண்டுகள் கடந்து விட்ட நிலையில், கடல் அரிப்பின் காரணமாக பாலத்தின் பல இடங்களில் உறுதித்தன்மை குறைந்தது. கப்பல் போக்குவரத்துக்காக பயன்படும் 'தூக்கு பாலத்தில்' அவ்வப்போது பழுதும் ஏற்பட்டது. எனவே, பாதுகாப்பு கருதி இப்பாலத்தில் 2022ம் ஆண்டு டிசம்பர் 22ந்தேதியுடன் ரெயில் சேவை நிறுத்தப்பட்டது.

பின்னர், பழைய பாம்பன் ரெயில் பாலம் அருகே புதிய ரெயில் பாலம் கட்ட மத்திய அரசு அனுமதி வழங்கியது. ரூ.550 கோடி மதிப்பீட்டில் புதிய ரெயில் பாலம் கட்டுவதற்கான பணிகள் தொடங்கியது. 2 ஆயிரத்து 78 மீட்டர் நீளத்திற்கு (2.1 கிலோ மீட்டர் தூரம்) கட்டப்பட்டு வந்தது. இதற்கிடையே, கடந்த ஆண்டு நவம்பர் மாதம் ரெயில்வே பாதுகாப்பு கமிஷனர் ஏ.எம்.சவுத்ரி புதிய ரெயில்வே பாலத்தை ஆய்வு செய்தார். அப்போது, ஒருசில குறைகளை சுட்டிக்காட்டினார். பாதுகாப்பு கமிஷனர் சுட்டிக்காட்டிய குறைகள் சரிசெய்யப்பட்டது. இதையடுத்து, புதிய ரெயில் பாலம் கட்டுமானப் பணி கடந்த ஆண்டு டிசம்பர் மாதத்தில் நிறைவடைந்து சோதனை ஓட்டமும் நடத்தப்பட்டது. பின்னர், பிப்ரவரி மாதத்தில் இந்த பாலத்தை பொதுமக்கள் பயன்பாட்டுக்கு திறந்து வைக்க திட்டமிடப்பட்டது. ஆனால், திறப்பு விழாவுக்கான ஏற்பாடுகள் ஏதும் நடைபெறவில்லை.

ரெயில்வே பாலப் பணிகள் முடிந்து 3 மாதங்கள் ஆகியும் திறந்துவைக்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டது. குறிப்பாக, பாம்பன் புதிய ரெயில்வே பாலம் மத்திய அரசின் கனவு திட்டம் என்பதால் அதை பிரதமர் மோடி மட்டுமே திறந்து வைப்பார் எனவும் ரெயில்வே அதிகாரிகள் தெரிவித்து வந்தனர். கடந்த 23ந்தேதி தெற்கு ரெயில்வே கூடுதல் பொதுமேலாளர் கவுசல் கிஷோர் தலைமையில், ரெயில்வே உயர் அதிகாரிகள் பாம்பன் பாலத்தை ஆய்வு செய்தனர்.

இந்த நிலையில், பாம்பன் புதிய ரெயில் பாலத்தை திறந்து வைக்க பிரதமர் மோடி ஏப்ரல் மாதம் 6ந்தேதி தமிழகம் வருகிறார். முன்னதாக 5ந்தேதி இலங்கை செல்லும் பிரதமர் மோடி அங்கு பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டு அங்கிருந்து நேரடியாக பாம்பன் வருகிறார். 6ந்தேதி பாம்பன் புதிய ரெயில் பாலத்தை பிரதமர் மோடி திறந்து வைக்கிறார்.

பாம்பன் ரெயில்வே பாலம் திறப்பு விழாவில், முதல் அமைச்சர் மு.க.ஸ்டாலின், கவர்னர் ஆர்.என்.ரவி, மத்திய ரெயில்வே மந்திரி அஷ்விணி வைஷ்ணவ் மற்றும் தமிழக எம்.பி.க்கள், அமைச்சர்கள், எம்.எல்.ஏ.க்கள், பா.ஜனதா மூத்த தலைவர்கள், தொண்டர்கள் என பலரும் கலந்துகொள்ள உள்ளனர். இதற்கான ஏற்பாடுகளை தெற்கு ரெயில்வே செய்து வருகிறது.

இதேபோல, பாம்பன் புதிய பாலம் திறப்புக்கு பின்னர் பிரதமர் மோடி, ராமேசுவரத்தில் உள்ள ராமநாதசாமி கோவிலில் தரிசனம் செய்கிறார். அதன்பிறகு பொதுக்கூட்டம் ஒன்றில் கலந்துகொள்கிறார். இதைத் தொடர்ந்து, மதுரை விமான நிலையம் சென்று அங்கிருந்து டெல்லி செல்ல உள்ளதாக பா.ஜனதா நிர்வாகிகள் தெரிவித்தனர்.

## இயக்குனர் பாரதிராஜாவின் மகன் மனோஜ் காலமானார்: திரையுலகம் அதிர்ச்சி



**சென்னை, மார்ச் 26–**

இயக்குனர் பாரதிராஜாவின் மகன் மனோஜ் ஆவார். கடந்த 1999 ஆம் ஆண்டு தாஜ் மஹால் என்ற திரைப்படத்தின் மூலம் கதாநாயகனாக அறிமுகமானார். அதை தொடர்ந்து சமுத்திரம், கடல் பூக்கள், அல்லி அர்ஜுனா, வருஷமெல்லாம் வசந்தம், ஈர நிலம் போன்ற வெற்றி திரைப்படங்களில் நடித்தார். கடந்த 2023 ஆம் ஆண்டு வெளியான மார்கழி திங்கள் படத்தின் மூலம் இயக்குனர் அவதாரம் எடுத்தார்.

ஈஸ்வரன், மாநாடு மற்றும் விருமன் படத்தில் முக்கிய கதாப்பாத்திரத்தில் நடித்தார்.

தமிழ் திரையுலகில் பல்வேறு திரைப்படத்தில் நடித்துள்ளார் கடைசியாக ஸ்னேக்ஸ் அண்ட் லேடர்ஸ் வெப் தொடரில் நடித்து இருந்தார். இந்நிலையில் மனோஜ் மாரடைப்பு காரணமாக அவரது வீட்டில் இன்று மாலை காலமானார். இவருக்கு சமீபத்தில் இருதய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டது என்ற தகவல் வெளியாகியுள்ளது. இச்செய்தி திரையுலகை சோகத்தில் ஆழ்த்தியுள்ளது. மனோஜுக்கு திரைத்துறை சார்ந்தவர்கள் அவர்களது இரங்கலை இணையத்தில் பதிவிட்டு வருகின்றனர். இவருக்கு திருமணமாகி இரண்டு மகள்கள் இருப்பது குறிப்பிடத்தக்கது.

## சென்னையில் செயின் பறிப்பு சம்பவங்களில் ஈடுபட்ட நபர் என்கவுன்டரில் சுட்டுக்கொலை





**சென்னை, மார்ச் 26–**

சென்னை அடையார் மாவட்ட போலீசாருக்கு நேற்றைய காலைப்பொழுது சோதனையாக அமைந்தது. இந்த போலீஸ் மாவட்ட எல்லைக்கு உட்பட்ட இடங்களில் தொடர் சங்கிலி பறிப்பு சம்பவங்கள் அரங்கேறின. காலை 6 மணி முதல் 7 மணி வரையிலான ஒரு மணி நேரத்தில் 6 இடங்களில் அடுத்தடுத்து வழிப்பறி சம்பவங்கள் நடைபெற்றதால் அடையார் போலீஸ் எல்லைக்கு உட்பட்ட இடங்களில் வாகன சோதனையை தீவிரப்படுத்தினர்.

வழிப்பறி சம்பவம் நடைபெற்ற இடங்களில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவான காட்சிகளை போலீசார் ஆய்வு செய்தனர். இதில் 6 இடங்களிலும் கைவரிசை காட்டியது 2 பேர் அடங்கிய ஒரே கும்பல் என்பது அடையாளம் தெரிந்தது. மோட்டார் சைக்கிளை ஓட்டியவர் ஹெல்மெட் மற்றும் முகமூடியும், பின்னால் அமர்ந்திருந்தவர் தொப்பி மற்றும் முகமூடியும் அணிந்திருந்தனர். அவர்கள் வந்த வாகன எண்ணை போலீசார் ஆய்வு செய்ததில் அது போலியான பதிவெண் என்பது கண்டறியப்பட்டது.

இதைத்தொடர்ந்து அவர்கள் வந்த மோட்டார் சைக்கிள் வாகனத்தின் நிறம் மற்றும் அவர்கள் அணிந்திருந்த உடை மூலம் அவர்கள் சென்ற இடங்களை கண்காணிப்பு கேமராக்கள் வரிசையாக காட்டி கொடுத்தது. 6 பெண்களிடம் 27 பவுன் நகைகளை வழிப்பறி செய்த அவர்கள் எந்தவித பதற்றமும் இல்லாமல் விமான நிலையத்தை நோக்கி சென்றதும், அங்கு அவர்கள் வழிப்பறி செயலுக்கு பயன்படுத்திய மோட்டார் சைக்கிளை நிறுத்திவிட்டு விமான நிலையத்துக்கு உள்ளே செல்லும் காட்சிகளும் கண்காணிப்பு கேமராவில் பதிவாகி இருந்தது.

அவர்கள், கைவரிசை காட்டிய நகைகளுடன் விமானம் மூலம் ஐதராபாத் தப்பி செல்ல 'போர்டிங் பாஸ்' வாங்கி கொண்டு விமானத்தில் ஏறுவதற்கு காத்திருக்கும் தகவல் போலீசாருக்கு கிடைத்தது. இதையடுத்து நிலையத்துக்கு விரைந்த போலீசார் 2 பேரையும் அதிரடியாக கைது செய்தனர். விசாரணையில் அவர்கள் 2 பேரும் உத்தரபிரதேச மாநிலத்தை சேர்ந்த இரானிய கொள்ளை கும்பலை சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்தது. இந்த நிலையில், சென்னையில் நேற்று தொடர் செயின் பறிப்பு சம்பவங்களில் ஈடுபட்டு, விமான நிலையத்தில் கைதான ஜாபர் குலாம் ஹுசைன் (26), போலீஸ் நடத்திய என்கவுன்டரில் சுட்டுக்கொல்லப் பட்டார். தரமணி ரெயில் நிலையம் அருகே பதுக்கப்பட்ட நகைகளை மீட்க அழைத்துச் செல்லும் போது, போலீசாரை தாக்கிவிட்டு தப்ப முயன்றபோது போலீசார் ஜாபர் குலாம் மீது துப்பாக்கி சூடு நடத்தினர். இதில் அவர் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார். இதையடுத்து ஜாபர் குலாமிடம் இருந்த பைக், கை துப்பாக்கி உள்ளிட்டவற்றை போலீசார் பறிமுதல் செய்தனர்.

மராட்டியத்தைச் சேர்ந்த ஜாபர் குலாம் மீது பல மாநிலங்களில் 50க்கும் மேற்பட்ட கொள்ளை வழக்குகள் இருப்பது குறிப்பிடத்தக்கது. ஜாபர் குலாம் தான் இந்த செயின் பறிப்பு சம்பவங்களில் மூளையாக செயல்பட்டதும் போலீசார் விசாரணையில் தெரியவந்துள்ளது. மேலும் செயின் பறிப்பு சம்பவங்களில் ஈடுபட்டு பினாகினி எக்ஸ்பிரஸ் ரெயிலில் தப்பிய சல்மான் என்பவரை போலீசார் நெல்லூர் அருகே சுற்றி வளைத்து கைது செய்து, சென்னை அழைத்துவந்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# மாவட்ட அளவிலான மீளாய்வுக்கூட்டம்



பள்ளிக்கல்வித்துறை சார்பில் மாவட்ட அளவிலான மீளாய்வுக்கூட்டம் வேலூர் மாவட்ட ஆட்சித்தலைவர் சுப்புலெட்சுமி தலைமையில் ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்றது. அருகில் முதன்மை கல்வி அலுவலர் மணிமொழி.

# 100 நாள் வேலை வழங்க கோரி மாற்றுத்திறனாளிகள் மனு



விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணெய்நல்லூர் வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் தமிழ்நாடு அனைத்து வகை மாற்றுத்திறனாளிகள் மற்றும் பாதுகாப்போர் உரிமைகளுக்கான சங்கம் சார்பில் திருவெண்ணைநல்லூர் ஒன்றியத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு 100 நாள் வேலை வழங்க கோரி வட்டார வளர்ச்சி அலுவலர் பாலசுப்ரமணியனிடம் மனு அளித்தனர் இதில் கோவிந்தராஜ், கஜலட்சுமி, மாவட்ட செயலாளர் கிருஷ்ணமூர்த்தி மற்றும் 50க்கு மேற்பட்ட மாற்றுத்திறனாளிகள் கலந்துகொண்டனர்.

# தமிழில் பெயர்ப்பலகை வைக்க துண்டறிக்கை வழங்கல்



**புதுச்சேரி, மார்ச் 26–**

வணிக நிறுவனங்களில் தமிழில் பெயர்ப்பலகை தமிழில் வைக்க வெளியிடப்பட்ட புதுவை அரசின் ஆணையை நடைமுறைப்படுத்த வேண்டி தமிழ் வளர்ச்சிச் சிறகம் மற்றும் தமிழ் அமைப்புகள் சார்பில் கடுமையான வெய்யிலையும் பொருட்படுத்தாது புதுவை நேருவீதி மற்றும் காந்தி வீதிகளில் உள்ள வணிக நிறுவனங்கள், கடைகளுக்குத் துண்டறிக்கை வழங்கி விழிப்புணர்வை ஏற்படுத்தினர்.

இதில் தாகூர் அரசு கலைக்கல்லூரித் தமிழ்த் துறை இளங்கலைத் தமிழ்ப்பயிலும் மாணவரகள் இருபத்தைந்துபேர் ஆர்வத்துடன் இப்பணியில் தம்மை ஈடுபடுத்திக்கொண்டது பாராட்டுக்குரியது. மேலும் ஆங்கிலப் பெயர்ப்பலகைக்கு ஈடாகத் தமிழில் எவ்வாறு மாற்றி எழுதவேண்டும் என்ற வழிகாட்டுதல்களையும் விளக்கிப்பேசினர். இந்நிகழ்வில் புவைத்தமிழ் வளர்ச்சிச் சிறகத்தின் தலைவர் முனைவர் வாசுகி, உறுப்பினர்கள், புதுவைத்தமிழ் இலக்கிய ஆய்வுக்கழகத் நிறுவுநர் தமிழ்மாமணி முனைவர் சு. வேல்முருகன், சாகித்ய அகாடமி பொதுக்குழு உறுப்பினர் கலைமாமணி பூபதி பெரியசாமி,

தாகூர் கலை அறிவியல் கல்லூரித் தமிழ்த்துறைப் பேராசிரியர் முனைவர் இரா.கோவலன், சமுதாயக் கல்லூரித் தமிழ்ப்பேராசிரியர் கலைமாமணி அரங்க.மு.முருகையன், புதுவைத்தமிழ்ச் சான்றோர் பேரவையின் நிறுவுநர் கலைமாமணி முனைவர் நெய்தல் நாடன், புதுவைத் தன்னுரிமைக் கழகத்தலைவர் தூ.சடகோபன், காந்தி மக்கள் தேசிய இயக்கத்தின் தலைவர் பாவலர் வேணு ஞானமூர்த்தி, சாகித்திய அகதெமி மேனாள் பொதுக்குழு உறுப்பினர் கலைமாமணி முனைவர் சுந்தரமுருகன், நடனக்கலைஞர் கலைமாமணி முருகன் உள்ளிட்ட தமிழ்அமைப்பினர் மற்றும் தமிழார்வலர்கள் கலந்துகொண்டனர்.

## தலையங்கம்

**மாலை எக்ஸ்பிரஸ்**

26.3.2025 (புதன்கிழமை)

# டிஜிட்டல் தொழில்நுட்பங்கள் தேவை

கடந்த டிசம்பர் மாதம் சாலை போக்குவரத்து வாரம் கடைப்பிடிக்கப்பட்டது. தமிழ்நாட்டில்தான் விபத்துகளின் எண்ணிக்கை அதிகம், விபத்துகளில் உயிரிழப்போர் எண்ணிக்கை அதிகம், காயம் அடைந்தோரின் எண்ணிக்கை அதிகம் என்ற நிலை கடந்த சில ஆண்டுகளாக இருந்தது. ஆனால் கடந்த ஆண்டு விபத்துகளில் உயிரிழந்தவர்கள் எண்ணிக்கை சற்றே குறைந்து இருக்கிறது. 2023ம் ஆண்டில் 18 ஆயிரத்து 347 பேர் தமிழ்நாட்டில் நடந்த 17 ஆயிரத்து 526 விபத்துகளில் உயிரிழந்து இருந்த நிலையில், 2024ல் 18 ஆயிரத்து 74 பேர் 17 ஆயிரத்து 282 விபத்துகளில் உயிரிழந்துள்ளனர்.

மக்கள் தொகை அதிகரித்துள்ள நிலையிலும், மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை அபரிமிதமாக உயர்ந்துள்ள நிலையிலும், சாலைகளின் நீளம் அதிகரிக்கப்பட்டுள்ள நிலையிலும் விபத்துகள் மற்றும் உயிரிழப்புகள் குறைந்து இருக்கிறது. ஆனாலும் மிக குறைந்த அளவிலேயே இது இருக்கிறது. 273 உயிரிழப்புகள்தான் குறைந்துள்ளது என்ற நிலையில் இது போதாது. இன்னும் குறையவேண்டும் என்றால் வாகன ஓட்டிகளுக்கு சாலை போக்குவரத்து விதிகள் குறித்து மேலும் விழிப்புணர்வு ஏற்படுத்தவேண்டும். பள்ளி மாணவர்களுக்கு மட்டுமல்லாமல் அனைத்து வாகன ஓட்டிகள் உள்பட பொதுமக்களுக்கும் விழிப்புணர்வை ஏற்படுத்தவேண்டும். ஏனெனில் வாகன ஓட்டிகளால் மட்டுமல்ல சாலைகளில் செல்லும், சாலைகளை கடக்கும் பொதுமக்களும் விபத்துகளுக்கு காரணமாக இருக்கிறார்கள்.

பெரும்பாலான விபத்துகளுக்கு டிரைவர்களின் கவனக்குறைவே காரணமாக இருக்கிறது. ஒவ்வொரு உயிரும் விலை மதிப்பில்லாதது என்ற வகையில் இன்னும் கடுமையான நடவடிக்கைகள் எடுப்பது மிக மிக அவசியமான தேவையாகிறது. முதலாவதாக தமிழ்நாடு முழுவதும் அடிக்கடி விபத்துகள் நடக்கும் இடங்கள் என்று கண்டறியப்பட்டுள்ள 6 ஆயிரத்து 165 இடங்களில் என்னென்ன காரணங்களால் இப்படி விபத்துகள் நடக்கிறது? என்பதை கண்டறிந்து அதை சரி செய்யவேண்டும். மது குடித்துவிட்டு வாகனங்களை யாரும் ஓட்டமுடியாது என்ற வகையில் கண்காணிப்புகள் தீவிரப்படுத்தப்படவேண்டும். நகரங்களிலும், கிராமங்களிலும் சாலைகளின் தரம் மேம்படுத்தப்படவேண்டும். கூடுமான வரையில் வளைவுகள் குறைக்கப்படவேண்டும். சாலை கட்டுமானங்களில் பாதுகாப்பு அம்சங்களை முக்கியமாக சேர்க்கும் நடைமுறையை செயல்படுத்த வேண்டும்.

சாலைகளில் கண்காணிப்பு முறைகளை மேம்படுத்த செயற்கை நுண்ணறிவு கண்காணிப்பு கேமரா, வேக ரேடார்கள் போன்ற பல டிஜிட்டல் தொழில் நுட்பங்கள் பயன்படுத்தப்பட வேண்டும். வாகன ஓட்டிகளுக்கு கண் பார்வைதான் மிகவும் அவசியம் என்று சென்னையில் நடந்த போக்குவரத்து விழிப்புணர்வு வாரத்தில் ஓய்வுபெற்ற போலீஸ் டி.ஜி.பி.யும், லோக்பால் உறுப்பினருமான அர்ச்சனா ராமசுந்தரம் கூறியதோடு, அரசு போக்குவரத்துக்கழக டிரைவர்களுக்கு கண் பரிசோதனை முகாமையும் தொடங்கி வைத்தார். சமீபத்தில் நடந்த ஒரு ஆய்வில், பெரும்பாலான 'டிரக்' டிரைவர்களுக்கு பார்வை குறைபாடு இருப்பது கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. இதை நாடாளுமன்றத்திலேயே மத்திய மந்திரி நிதின் கட்காரி கூறியிருக்கிறார். சாலை விபத்துகளை இன்னும் அதிக அளவில் குறைக்கவேண்டும் என்ற உறுதிப்பாட்டை ஒவ்வொருவரும் எடுத்துக்கொண்டாலே விபத்துகள் தானாகவே குறைந்துவிடும். முக்கியமாக போக்குவரத்து போலீசார் சாலை விதிகள் மீறப்படாமல் இருப்பதை கண்காணிக்க தீவிரமாக பணியாற்றினாலே விபத்துகள் குறையும்.

# வெள்ளி கொலுசு உற்பத்தி மையத்தை திறந்து வைத்த முதல்வர்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னையிலிருந்து காணொலிக் காட்சியின் வாயிலாக சேலம், அரியாக்கவுண்டம்பட்டியில் ரூ.25.29 கோடி மதிப்பீட்டில் புதியதாகக் கட்டப்பட்டுள்ள வெள்ளி கொலுசு உற்பத்தி மையத்தினைத் திறந்து வைத்ததைத் தொடர்ந்து, அரியாக்கவுண்டம்பட்டி வெள்ளி கொலுசு உற்பத்தி மையத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சித்தலைவர் பிருந்தாதேவி கலந்துகொண்டு குத்துவிளக்கேற்றினார்.

# லிங்கம்பட்டி ஊராட்சியில் தொழிற்பேட்டை திறப்பு




தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, தலைமைச் செயலகத்தில் குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறையின் தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் சார்பில், தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம் லிங்கம்பட்டி ஊராட்சியில் உருவாக்கப்பட்டுள்ள தொழிற்பேட்டையை காணொலிக்காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் குத்துவிளக்கேற்றி பார்வையிட்டார்.

# தங்கம் விலை சவரனுக்கு ரூ.80 உயர்வு

**சென்னை, மார்ச் 26–**

தமிழகத்தில் கடந்த சில தினங்களாக தங்கத்தின் விலை ஏற்ற, இறக்கத்துடன் காணப்பட்டு வருகிறது. நேற்று தங்கத்தின் விலை சவரனுக்கு ரூ.240 குறைந்து, ஒரு சவரன் ஆபரணத் தங்கம் ரூ.65,480 க்கு விற்பனை செய்யப்பட்டது.

இந்நிலையில் தங்கத்தின் விலை இன்று சற்று உயர்ந்துள்ளது. இன்றைய நிலவரப்படி தங்கம் விலை கிராமுக்கு ரூ.10 உயர்ந்து, ஒரு கிராம் ரூ.8,195க்கும், சவரனுக்கு ரூ.80 உயர்ந்து ஒரு சவரன் தங்கம் ரூ.65,560 க்கும் விற்பனையாகி வருகிறது.

அதே சமயம், வெள்ளியின் விலை 4 நாட்களுக்கு பிறகு இன்று உயர்ந்துள்ளது. இதன்படி வெள்ளியின் விலை கிராமுக்கு ஒரு ரூபாய் உயர்ந்து, ஒரு கிராம் வெள்ளி ரூ.111க்கும், ஒரு கிலோ வெள்ளி ரூ.1,11,000 க்கும் விற்பனை செய்யப்படுகிறது.

# மகளிர் திட்டங்கள் குறித்து ஆய்வுக்கூட்டம்



திருப்பூர் மாவட்ட ஆட்சித்தலைவர் கிறிஸ்துராஜ் தலைமையில் திருப்பூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில் மகளிர் திட்டத்தின் கீழ் நடைபெற்று வரும் திட்டங்கள் குறித்து ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது.

# மினி பேருந்துகள் இயக்க ஆணை வழங்கல்



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் உமா மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புதிய வழிதடங்களில் மினிப் பேருந்துகள் இயக்குவதற்கான ஆணைகளை பேருந்து உரிமையாளர்களுக்கு வழங்கினார்.

# கேஎஸ்பி ரமேஷ் எம்எல்ஏ பிறந்தநாள் விழா



புதுச்சேரி, மார்ச் 26–

அகில இந்திய என்ஆர் காங்கிரஸ் மாநிலத் தலைவர் நல்லாசியுடன் பிறந்தநாள் விழா காணும் மாநில இளைஞரணி தலைவர் கேஎஸ்பி ரமேஷ் எம்எல்ஏ பிறந்தநாள் விழா அரியாங்குப்பம் தொகுதி இளைஞரணி சார்பில் இளைஞர் அணி தலைவர் ஆர்வி மணிகண்டன் தலைமையில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கி சிறப்பாக கொண்டாடப்பட்டது. மேலும் ஊர்வலமாக சென்று கேஎஸ்பி ரமேஷ் எம்எல்ஏவை பொன்னாடை அணிவித்து பூங்கொத்து கொடுத்து வாழ்த்து தெரிவிக்கப்பட்டது. இந்நிகழ்ச்சியில் முக்கிய பிரமுகர் சாந்தகுமார், நந்தகோபால், அரியாங்குப்பம் தொகுதி செயலாளர் செல்வகுமார், நிர்வாகிகள் முருகையன், கோபிநாத், குமார், இளைஞர் அணி தெற்கு மாவட்ட செயலாளர் சசி, தொகுதி இளைஞரணி துணைத் தலைவர்கள் அருணந்தன், அப்பாடி, குமார், பொதுச் செயலாளர் நித்தியானந்தம், தொகுதி செயலாளர்கள் முருகன், மோகன், சரவணன், வசந்த், சதீஷ், மகேந்தர், இணைச் செயலாளர்கள் வினோத், பிரபு, போர் மன்னன், செந்தில், தேவா, விக்கி, செயற்குழு உறுப்பினர்கள் ஏழுமலை, மணி வாசன், ஹரிஹரன், மேலும் என்ஆர் காங்கிரஸ் பிரமுகர்கள் ஆணியப்பன், விக்னேஷ் மற்றும் பலர் பெருந்திரளாக கலந்து கொண்டனர்.

# 100 நாட்கள் தீவிர காசநோய் முகாம் புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு பாராட்டு



புதுச்சேரி, மார்ச் 26–

2024 டிசம்பர் 7 முதல் 2025 மார்ச் 17 வரை நடைபெற்ற 100 நாட்கள் தீவிர காசநோய் முகாமில் சிறப்பான செயல்திறனை வெளிப் படுத்தியதற்காக புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு, இந்திய அரசின் சுகாதாரம் மற்றும் குடும்ப நல அமைச்சகத்தால் பாராட்டு சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

காசநோய்பாதிப்பு அதிகம் உள்ள குழுக்களில் அதிகஎண்ணிக்கையிலான நபர்களை அதிகளவிலான ழிகிகிஜி மரபணு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதை மையமாக கொண்டு புதுச்சேரி தேசிய மட்டத்தில் தலைசிறந்த செயல்திறனைக் கண்டது முகாமின் காலப்பகுதியில், மொத்தமாக 3.81 லட்சம் காசநோய்க்கு அதிக வாய்ப்புள்ள அனைவரும் பரிசோதிக்கப்பட்டனர். இதில் 14,956 பேருக்கு காசநோய் இருக்கலாம் 67607 சந்தேகிக்கப்பட்டது 14.532 பரிசோதனைகள் மற்றும் 25.348 எக்ஸ்ரே பரிசோதனைகள் வீட்டிற்கு அருகிலேயே எடுக்கப்பட்டது. இவற்றின் மூலம் 356 பேருக்கு காசநோய் பாதிப்பு உறுதி செய்யப்பட்டது. மேலும் அவர்களுக்கு உடனடி சிகிச்சை தொடங்கப்பட்டது.

சுகாதாரம் மற்றும் குடும்ப நலத்துறை இந்த வெற்றிக்குப் பின்னால் இருந்த அனைத்து மருத்துவ அலுவலர்கள் ஆய்வக நிபுணர்கள், இடம்நிலை பணியாளர்கள், சமூக சுகாதார ஊழியர்கள் மற்றும் தோழமை அமைப்புகளின் ஒத்துழைப்பிற்கும், அர்ப்பணிப்பிற்கும் மனமார்ந்த நன்றியை தெரிவித்துக்கொள்கிறது.

தேசிய காசநோய் ஒழிப்பு திட்டம் செயல்படுத்துவதில் புதுச்சேரி மாநிலம் தொடர்ந்து முழுமையாக முனைப்புடன் பணியாற்றி காசநோய் இல்லா புதுச்சேரி மற்றும் காசநோய் இல்லா இந்தியா என்னும் இலக்கை நோக்கி உறுதியுடன் செயல்படுகிறது.

# நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம்




சேலம், மார்ச் 26–

சோனா கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் நாட்டு நலப்பணி திட்ட சிறப்பு முகாம் செல்லப்பிள்ளை குட்டை கிராமத்தில் நடைபெற்றது. இந்த முகாமில் தீயணைப்பு பற்றிய விழிப்புணர்வு நிகழ்வு, போதை பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி, ஆம்புலன்ஸ் செயல்பாட்டு பயிற்சி நிகழ்வு, பிளாஸ்டிக் பொருள் ஒழிப்பு விழிப்புணர்வு பேரணி போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு கல்லூரியின் முதல்வர் முனைவர் காதர் நவாஸ் தலைமை உரை ஆற்றினார். திட்ட அலுவலர் ஜெகன்நாத் வரவேற்புரை ஆற்றினார். இந்த முகாமை நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப்பாளர் பெரியார் பல்கலைக்கழகம் முனைவர் சதீஷ் முகாமை துவக்கி வைத்து சிறப்புரை ஆற்றினார். இந்நிகழ்வில் செல்லப்பிள்ளை குட்டை பஞ் சாயத்து தலைவர் வெங்கடாசலம், பஞ்சாயத்து துணை தலைவர் காயத்ரி சம்பத், வார்டு உறுப்பினர்கள் வெங்கடேசன், கோவிந்தராஜு, இந்த ராணி குணசேகரன், பழனிச்சாமி, சாந்தி முருகன், சுப்பிரமணி, பழனியம்மாள் அம்மாசி, அம்பிகா பாஸ்கர் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினார்கள். இதில் கல்லூரியின் மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். முகாமின் முடிவில் திட்ட அலுவலர் முனைவர் கற்பகராமன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# பாரதிய போக்குவரத்து தொழிற்சங்க பேரவை மாநில மாநாடு



சேலம், மார்ச் 26–

பாரதிய போக்குவரத்து தொழிற் சங்க பேரவை தமிழ்நாடு, மாநில மாநாடு சேலத்தில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியின் முன்னதாக சேலம் கோட்ட டிஎன்எஸ்டிசி அலுவலகம் முன்பு சிறப்பு அழைப்பாளராக வருகை புரிந்த ஆல் இந்தியா ஜெனரல் செகரட்டரி ராஜு பால் ராவ் கொடியேற்றி விழாவினை துவக்கி வைத்தார். பிறகு பிஎம்எஸ்ன் மாநில பொதுச் செயலாளர் சங்கர் பேரணியை துவக்கி வைத்தார். இந்த பேரணியானது ராமகிருஷ்ணா சாலையில் உள்ள சேலம் கோட்ட அலுவலகத்தில் இருந்து சேலம் அரசு கலைக் கல்லூரி வழியாக மரவனேரி சாலையில் உள்ள தேசிய சேவா சமிதி மாதவம் மண்டபத்தை பேரணி வந்தடைந்தது. மேலும் பிபிஎம்எம் தமிழ்நாடு மாநில பேரவை தலைவர் விமேஸ்வரன் தலைமை தாங்கி நடத்தினார். இதில் பிபிஎம்எம் தமிழ்நாடு பேரவை செயலாளர் சதீஷ், பிபிஎம்எம் தமிழ்நாடு பேரவை பொருளாளர் பொன் கிருஷ்ணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பிபிஎம்எம் தமிழ்நாடு சேலம் மண்டல பொதுச் செயலாளர் ஆனந்த ராவ் அனைவரையும் வரவேற்று வரவேற் புரை ஆற்றினார். இந்நிகழ்ச்சிக்கு சிறப்பு அழைப்பாளர்களாக பிஎம்எஸ் தென் பாரத அமைப்பு செயலாளர் துரைராஜ், பிஎம்எஸ் தென் பாரத துணை அமைப்பு செயலாளர் ராஜீவன், பிஎம்எஸ் தமிழ்நாடு மாநில பொது செயலாளர் சங்கர், பிஎம்எஸ் தமிழ்நாடு அரசு பொதுத்துறை பொறுப்பாளர் முருகேசன், பிபிஎம்எம் தமிழ்நாடு தேசிய செயற்குழு உறுப்பினர் முருகன், பிபிஎம்எம் ஆல் இந்திய ஜெனரல் செகரட்டரி ஸ்பெஷல் கெஸ்ட் ராஜு பால்ராவ், பிஎம்எஸ் தமிழ்நாடு மாநில தலைவர் வெங்கட் ராகவன், பிஎம்எஸ் தமிழ்நாடு மாநில அமைப்பு செயலாளர் தங்கராஜ், பிபிஎம்எம் தமிழ்நாடு தேசிய செயலாளர் ராஜேஷ், பிஎம்எஸ் மாநிலத் துணைத் தலைவர் சந்தானகிருஷ்ணன், பிஎம் எஸ் சேலம் மாவட்ட செயலாளர் கே எஸ் பழனிச்சாமி ஆகியோர் கலந்துகொண்டு சிறப்புரையாற்றினார் கள். இந்த மாநாட்டில் போக்குவரத்து தொழிலாளர்களை அரசு ஊழியராக ஆக்க வேண்டும், போக்குவரத்து துறையை தனியார் மயமாக்கும் போக்கை கைவிட வேண்டும், போக்குவரத்து துறையில் உள்ள காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும் போன்ற பல்வேறு தீர்மானங்கள் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்டது. கூட்டத்தின் இறுதியில் பிபிஎம்எம் தமிழ்நாடு பேரவை மாநில பொது செயலாளர் பாலன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# அண்ணாமலை பல்கலையில் தேசிய பயிற்சி திட்டம் துவக்கம்




சிதம்பரம், மார்ச் 26–

சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்தில் 13.3.25 முதல் 15.3.25 வரை "காலநிலை மீள்தன்மை மற்றும் நிலையான வளர்ச்சி நடைமுறைகள்" குறித்த தேசிய பயிற்சித் திட்டம் தொடங்கப்பட்டது. பேரிடர் மேலாண்மை மையத்தின் இயக்குநர்மற்றும் பேராசிரியர் முனைவர். எம்.விஜய் வரவேற்புரை யாற்றினார். காலநிலை மாற்றம் என்பது நாம் அனைவரும் அறிந்தது போல, வெறும் சுற்றுச்சூழல் பிரச்சினை மட்டுமல்ல இது மனித வளர்ச்சியின் பொருளாதார, சமூக மற்றும் கலாச்சார பரிமாணங்களுடன் குறுக்கிடும் ஒரு சிக்கலான சவால் என்று அவர்விளக்கினார்.

இந்த பயிற்சித் திட்டம் காலநிலை தகவமைப்பு உத்திகள் மற்றும் நிலையான வள மேலாண்மை முதல் பொருளாதார வளர்ச்சியை சுற்றுச்சூழல் பாதுகாப்புடன் சமநிலைப்படுத்தும் புதுமையான நடைமுறைகள் வரை முக்கியமான தலைப்புகளை ஆராயும்.

துணைவேந்தர் ஒருங்கிணைப் பாளர் குழு உறுப்பினர் பேராசிரியர்எஸ்.ஆருட்செல்வி விழாவிற்குத் தலைமை தாங்கி தலைமையுரையாற்றினார்.

தஞ்சாவூர் தேசிய உணவு தொழில்நுட்ப நிறுவனம், தொழில்முனைவோர் மற்றும் மேலாண்மை பதிவாளர் பேராசிரியர். முனைவர் எஸ்.சண்முகசுந்தரம் தொடக்க உரையாற்றினார். அண்ணாமலைப் பல்கலைக்கழக பதிவாளர் பேராசிரியர்.முனைவர் எம்.பிரகாஷ் பாராட்டுரை வழங்கினார். பொறியியல் மற்றும் தொழில்நுட்ப புலமுதல்வர் பேராசிரியர்.முனைவர். சி. கார்த்திகேயன் நன்றி கூறினார். மேற்கண்ட திட்டம் சென்னை சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறையால் நிதியுதவி செய்யப்படுகிறது.

# தேசிய ட்ரோன் செயல்திறன் போட்டி




சங்கரன்கோவில், மார்ச் 26–

ஸ்ரீவில்லிபுத்தூர், கலசலிங்கம் பல்கலையில், பி.டெக்.ஏரோ நாட்டிக், மூன்றாமாண்டு மாணவர்கள், கவின் குமார், அபிஷேக், கிரண்குமார் ஆகி யோர் பேராசிரியர் ஜெசி மைக்கிளா ஆலோசனையில் இரண்டு கிலோ எடையில் ட்ரோன் வடிவமைத்து, சந்தீகர், பஞ்சாப் இன்ஜினியரிங் கல்லூரியில் நடைபெற்ற "ட்ரோன் செயல்திறன்"ட்ரோன்வெர்ஸ் 4.0 போட்டிகள், பளு தூக்குதல், குறிப் பிட்ட இடத்தில் டெலிவரி, துல்லிய இறக்கம் ஆகியவற்றில் கலந்துகொண்டு முதலிடம் பெற்று வெற்றிபெற்றனர்.

"இந்த ட்ரோன் செய்வதற்கு ஒரு லட்சம் ஆனது என்றும்,போட்டிகளில் 100 பேருக்கும் மேற்பட்ட மாணவர்கள் பல மாநிலங்களிலிருந்து பங்கேற்றனர் "என்றும் மாணவர்கள் கூறினர்,

வெற்றிபெற்றவர்களுக்கு கேடயம், ரொக்கப் பரிசு, சான்றிதழ்களை இந்திய ஏரோநாட்டிக் சங்க பிரதிநிதிகள் வழங்கினர். ட்ரோன் போட்டியில் சாதனை புரிந்த மாணவர்களை, பல்கலை வேந்தர் முனைவர் கே ஸ்ரீதரன், துணை தலைவர் முனைவர் எஸ்.சசி ஆனந்த், துணை வேந்தர் முனைவர் எஸ். நாராயணன், பதிவாளர் முனைவர் .வெ, வாசுதேவன், துறைத்தலைவர் ஆர்.செந்தில்குமார் மற்றும் ஆசிரியர்கள் பாராட்டினர்.

# உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்கேற்க முத்துக்கு அழைப்பு



புதுச்சேரி, மார்ச் 26–

பிரான்சு நாட்டில் நடைபெற உள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்கேற்க புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்துக்கு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

பிரான்சு நாட்டில் செப்டம்பர் மாதம் 2025 நடைபெற உள்ள உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் பங்கேற்று சிறப்பிக்குமாறு புதுவைத் தமிழ்ச் சங்கத் தலைவர் கலைமாமணி முனைவர் வி. முத்துக்கு உலகத் தமிழாராய்ச்சி மன்ற பொதுச்செயலாளர் கோவிந்தசாமி ஜெயராமன் நேரில் அழைப்பு விடுத்தார். உடன் மன்ற ஒருங்கிணைப்பாளர் பெருமாள் ஆகியோர் உள்ளனர்.

# கேஎஸ்பி ரமேஷ் எம்எல்ஏ பிறந்தநாள் விழா

புதுச்சேரி, மார்ச் 26–

புதுச்சேரி கதிர்காமம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் மற்றும் என்ஆர் காங்கிரஸ் இளைஞர் அணி தலைவர் கேஎஸ்பி ரமேஷ் பிறந்தநாளை முன்னிட்டு ஸ்ரீ அங்காள பரமேஸ்வரி அம்மன் ஆலயத்தில் தீபாராதனை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

பிறகு 300 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. என்ஆர் காங்கிரஸ் மற்றும் சோனியா காந்தி நகர் இளைஞர்கள் மற்றும் ஊர் பொதுமக்கள் நல வாழ்வு சங்கம் என்ஆர் காங்கிரஸ் இளைஞர் அணி சார்பாக நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

இதில் ஆலய நிர்வாகி வீரபத்திரன் தலைவர், சோனியா காந்தி நல வாழ்வு சங்க தலைவர் வெங்கடேசன் சோனியா காந்தி நகர் நலவாழ்வு சங்க சங்க செயலாளர் வெங்கடேசன் மற்றும் துணை செயலாளர் கோபி, அமைப்பாளர்கள் ரவி, மணிகண்டட



பிரபு ,கணேசன், முருகன் மோகன், பிரேம், பிரபு மற்றும் சங்க பொறுப்பாளர்கள், கட்சி நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

N.Rகாங்கிரஸ் இளைஞர் அணி கதிர்காமத் தொகுதி இணை செயலாளர் புகழேந்தி மற்றும் ஊர் பொதுமக்கள் நிர்வாகிகள்

# தடகள வீரர், வீராங்கனைகள் ஆட்சியரிடம் வாழ்த்து




நாமக்கல், மார்ச் 26–

நாமக்கல் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட ஆட்சித்தலைவர் உமாவிடம் பெங்க ளூரில் நடைபெற்ற தேசிய அளவிலான மூத்தோர் தடகள போட்டியில், தமிழ்நாடு அணியில் இடம்பெற்றிருந்த நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த தடகள வீரர், வீராங்கனைகள் வெற்றி பெற்ற 9 பதக்கங்கள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை காண்பித்து வாழ்த்து பெற்றனர்.

தேசிய அளவிலான மூத்தோர் தடகள போட்டி பெங்களூரில் கடந்த 4.3.2025 முதல் 9.3.2025 வரை நடைபெற்றது. இப்போட்டியில் தமிழ்நாட்டு அணியில் நாமக்கல் மாவட்டத்தை சேர்ந்த தடகள வீரர் மற்றும் வீராங்கனைகள் ஈட்டி எறிதல், குண்டு எறிதல், தட்டு எறிதல் மற்றும் 4ஙீ100 மீட்டர் ஓட்ட போட்டி, உயரம் தாண்டுதல் உள்ளிட்ட போட்டிகளில் பங்கேற்று 3 தங்கம், 3 வெள்ளி மற்றும் 3 வெண்கல பதக்கம் என மொத்தம் 9 பதக்கங்களை வென்றுள்ளனர்.

நாமக்கல் மாவட்டத்தை சார்ந்த வீராங்கனை லீலாவதி அவர்கள் ஈட்டி எறிதல் போட்டியில் 1 தங்க பதக்கம், குண்டு எறிதலில் 1 வெள்ளி பதக்கம், கருப்பையா அவர்கள் குண்டு எறிதல் போட்டியில் 1 வெள்ளி பதக்கம், மோகன்ராஜ் அவர்கள் உயரம் தாண்டுதல் போட்டியில் 1 தங்க பதக்கம், 5,000 மீட்டர் நடைபோட்டியில் 1 வெண்கலம் பதக்கம், அருள்மொழி 4ஙீ100 மீட்டர் ஓட்ட போட்டியில் 1 தங்க பதக்கம், உயரம் தாண்டுதலில் 1 வெள்ளி பதக்கம், நீளம் தாண்டுதலில் 1 வெண்கல பதக்கம் மற்றும் குமார் அவர்கள் தட்டு எறிதல் போட்டியில் 1 வெண்கல பதக்கம் வென்று சாதனைப் படைத்துள்ளனர்.

இந்நிகழ்வில் மாவட்ட விளையாட்டு அலுவலர் எஸ்.கோகிலா, மாவட்ட மூத்தோர் தடகள சங்க செயலாளர் ஜி.சிவக்குமார், ஒருங்கிணைப்பாளர்கள் திரு.யுவராஜ் மற்றும் நாகராஜ் உட்பட வெற்றிபெற்ற வீரர், வீராங்கனைகள் கலந்து கொண்டனர்.

# பஞ்சாயத்து நிதியை சமமாக வழங்க ஆட்சியரிடம் கோரிக்கை



தென்காசி, மார்ச் 26–

மார்ச் 28 ஆம் தேதி தென்காசியில் மாவட்ட பஞ்சாயத்து கூட்டம் நடக்கிறது. கவுன்சிலர்களுக்கு அஜெண்டா மாவட்ட பஞ்சாயத்து அலுவலகத்தில் இருந்து அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. இந்நிலையில், மொத்தத் தொகை 2,99,08,393 ரூபாயை அனைத்து கவுன்சிலர்களுக்கும் மக்கள் பணிக்காக சமமாக வழங்க வேண்டும் என மாவட்ட கவுன்சிலர்கள் கனிமொழி மற்றும் மாரிமுத்து ஆகியோர் தென்காசி ஆட்சியரிடம் கோரிக்கை மனு வழங்கினர்.

# காசநோய் ஒழிப்பு விழிப்புணர்வு கருத்தரங்கம்




ஒட்டன்சத்திரம், மார்ச் 26–

திண்டுக்கல் மாவட்டம், ரெட்டியார்சத்திரம் எர்ணம்பட்டி ஆறுபடையப்பா உயர்நிலைப்பள்ளி உலக காசநோய் தினத்தை முன்னிட்டு விழிப்புணர்வு கருத்தரங்கம் மற்றும் வினாடி வினா போட்டியில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு பட்ஸ் கல்விக்குழுமம் தாளாளர் பொன். கார்த்திக் தலைமை வகித்தார். பள்ளியின் நிறுவனர் ஆசிரியை கண்ணம்மாள் முன்னிலை வகித்து, வரவேற்புரை யாற்றினார். ஒட்டன்சத்திரம் அரசு மருத்துவமனை முன்னாள் தலைமை மருத்துவர் மற்றும் இந்திய மருத்துவக் கழகம் ஒட்டன்சத்திரம் செயலாளர் டாக்டர்.ஏ.ஆசைத்தம்பி கலந்துகொண்டு கருத்துரை வழங்கி, வினாடி வினா போட்டிகளை நடத்தி வெற்றிபெற்ற மாணவ, மாணவிகளுக்கு பரிசுகளை வழங்கினார். இதில் திண்டுக்கல் மாவட்ட கூட்டுறவு முன்னாள் துணை பதிவாளர் டேனியல் விழிப்புணர்வு வினாடி வினா போட்டியில் வெற்றிபெற்றவர்களை வாழ்த்தி பேசினார்.

# நிலங்களுக்கு பூச்சி மருந்து தெளிக்கும் விவசாயிகளுக்கு முன்னெச்சரிக்கை செயல் விளக்கம்



புதுச்சேரி, மார்ச் 26–

புதுச்சேரி அரசு வேளாண் மற்றும் விவசாயிகள் நலத்துறையின் சார்பில் ஆத்மா திட்டத்தின் மூலம் மதகடிப்பட்டு பண்ணைத்தகவல் மற்றும் ஆலோசனை மையத்தின் வாயிலாக வேளாண்மையில் பூச்சிக்கொல்லிகள் தெளித்தல் உரங்கள் இடுதல் போன்றவற்றில் கடைபிடிக்கவேண்டிய முன்னெச்சரிக்கை பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்த செயல்விளக்க முகாம் நடைபெற்றது. இந்நிகழ்வில் விவசாயிகளை வேளாண் அதிகாரி நடராஜன் வரவேற்று ரசாயன பூச்சிக்கொல்லிகள் மற்றும் கலைக்கொல்லி மருந்துகள் பயிர்களுக்கு தெளிப்பான் மூலம் அடிக்கும்போது விவசாயிகளுக்கு ஏற்படும் கண்பாதிப்பு மற்றும் தோல்நோய் ஆஸ்த்துமா போன்றவை குறித்தும் அதற்கான பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்தும் பேசினார். துணை வேளாண் இயக்குனர் சாந்தி பால்ராஜ் தலைமையேற்று இந்நிகழ்வினை துவக்கி வைத்தார்.

இந்த செயல்விளக்க முகாமில் மதகடிப்பட்டு, கலிதீர்த்தாள் குப்பம், திருபுவனை, திருவாண்டார்கோவில், சன்னியாசிக்குப்பம் மற்றும் வாதானூர் ஆகிய வருவாய் கிராமங்களை சார்ந்த விவசாயிகள் கலந்து கொண்டு பயன்பெற்றனார்.

இந்நிகழ்வில் கலந்து கொண்ட விவசாயிகளுக்கு பாதுகாப்பு கண் கண்ணாடிகள், ரப்பர் கையுரைகள், பருத்தி கையுறைகள், முகக்கவசம், தொப்பி ஆகியவை விவசாயிகளுக்க இலவசமாக வழங்கப்பட்டது.

முடிவில் ஆத்மா தொழில்நுட்ப மேலாளர் சிரஞ்சீவி நன்றி கூறினார். இந்நிகழ்வின் ஏற்பாடுகளை உதவி வேளாண் அலுவலர்கள் பக்கிரி, புவனேஷ்வரி, செயல்விளக்க உதவியாளர் ஜெயசங்கர், அலுவலக ஊழியர்கள் சண்முகம், சுபாஷ் ஆகியோர் செய்திருந்தனர்.

# கிராம வேளாண் பணி அனுபவ திட்ட துவக்க விழா

ஆலங்குடி, மார்ச் 26–

புதுக்கோட்டை மாவட்டம் ஆதனக்கோட்டை கிராமத்தில் வேளாண் கல்லூரியில் மாணவர்களால் கிராம மேலாண்மை பணி அனுபவத் திட்ட துவக்க விழா நடைபெற்றது. ஆதனக்கோட்டை கிராமத்தில் புஷ்கரம் வேளாண் கல்லூரியின் இறுதியாண்டு வேளாண் பட்டப்படிப்பு மாணவிகளின் கிராம வேளாண்மை பணி அனுபவத் திட்ட துவக்க விழாவில் புதுக்கோட்டை உதவி திட்ட இயக்குனர் அன்பரசு தலைமை வகித்தார். வேளாண் தொழில் நுட்பங்களை பற்றியும் திட்டத்தின் நோக்கம் குறித்தும் செயல்பாடுகள் செயல் திட்டங்கள் பற்றியும் மாணவிகளுக்கும், விவசாயிகளுக்கும் எடுத்து கூறினார். சிறப்பு



விருந்தினராக கல்லூரியின் பேராசிரியர் டாக்டர் லலிதா விதைக்கலாம் அறக்கட்டளை மரம் நடுதலின் முக்கியத்து வம் பற்றி எடுத்துரைத்தார். நிகழ்ச்சியில் கலந்து கொண்ட விவசாயிகள், பொது மக்கள் அனைவருக்கும் மரக்கன்றுகளை மாணவிகள் வழங்கி சிறப்பித்தனர்.

# கவர்னருடன் துணைவேந்தர் சந்திப்பு



புதுச்சேரி பல்கலைக்கழக துணைவேந்தர் பிரகாஷ் பாபு, பல்கலைக்கழக தலைமை காப்பாளரான கவர்னர் கைலாஷ்நாதனை ராஜ்நிவாஸில் மரியாதை நிமித்தமாக சந்தித்தார்.

# ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் மாணவர்களுக்கு கல்வி உதவித்தொகை: முதலமைச்சர் ரங்கசாமி வழங்கினார்



**புதுச்சேரி, மார்ச் 26-**

புதுச்சேரி ஆதிதிராவிடர் நலத்துறை சார்பில் ஆதிதிராவிடர் மாணவ, மாணவியர்களுக்கான கல்வி உதவித்தொகையை முதலமைச்சர் ரங்கசாமி வழங்கினார்.

புதுச்சேரி, காரைக்கால், ஏனாம் பகுதியில் உள்ள அரசு மற்றும் தனியார் பள்ளி, கல்லூரிகளில் பயிலும் எஸ்.சி., எஸ்.டி., மாணவர்களுக்கான 2024–25ம் கல்வி ஆண்டிற்கான கல்வி உதவித்தொகை வழங்கும் நிகழ்ச்சி சட்டசபை வளாகத்தில் நடந்தது.

முதலமைச்சர் ரங்கசாமி தலைமை தாங்கி, 561 பள்ளி, கல்லூரிகளில் பயிலும் 19,893 மாணவ, மாணவிகளுக்கு இரண்டாம் கட்டமாக 21 கோடியே 89 லட்சம் ரூபாய் கல்வி உதவித்தொகையை வழங்கினார்.

இதில் அமைச்சர் சாய் ஜெ. சரவணன்குமார், துறை இயக்குநர் இளங்கோவன் மற்றும் அதிகாரிகள் உடனிருந்தனர்.

## மாநில அந்தஸ்து பெறாவிட்டால்

# புதுவை எத்தனை ஆண்டுகள் ஆனாலும் பின்தங்கிய நிலையில் தான் இருக்கும்

## முதலமைச்சர் ரங்கசாமி ஆதங்கம்

**புதுச்சேரி, மார்ச் 26-**

'புதுவைக்கு மாநில அந்தஸ்து பெறாவிட்டால் எத்தனை ஆண்டுகள் ஆனாலும், புதுச்சேரி பின்தங்கிய நிலையில் தான் இருக்கும்' என, முதலமைச்சர் ரங்கசாமி ஆதங்கத்துடன் சட்டப்பேரவையில் கூறினார்.

புதுச்சேரி சட்டசபை கூட்டத்தொடர் கடந்த 10ம் தேதி துவங்கி நடந்து வருகிறது. நேற்றைய கேள்வி நேரத்தின் போது புதுச்சேரியில் புதிய தொழிற்சாலைகள் கொண்டு வருவது குறித்து விவாதம் நடந்தது.

அசோக்பாபு (பாஜக.): புதுச்சேரி மாநிலத்தில் புதிதாக தொழில் தொடங்க ஏதுவாக முதலீட்டார்கள் மாநாடு நடத்தும் திட்டம் அரசிடம் எந்நிலையில் உள்ளது? கரசூரில் தொழில் பூங்கா அமைக்க மத்திய அரசு அனுமதி அளித்துள்ளதால் தொழில் முனைவோருக்கு எப்போது இடத்தை அரசு பிரித்து வழங்கும்?

முதலமைச்சர் ரங்கசாமி: ஜூன் மாதம் தொழிற்சாலைகளுக்கு நிலம் பிரித்துக் கொடுக்கப்படும். முதலீட்டார்கள் மாநாடு நடத்துவது குறித்து பரிசீலித்து வருகிறோம். ஆனால், யார் வருவார்கள் என தெரியவில்லை. ஒரு தொழிற்சாலை துவங்க



அனுமதி பெறுவதற்கு எவ்வளவு கடினமாக உள்ளது என்று அனைவருக்கும் தெரியும்.

அசோக்பாபு (பாஜக.): புதுச்சேரியில் ஏராளமான நிறுவனங்கள் தொழில் துவங்க ஆர்வமாக உள்ளன.

முதலமைச்சர் ரங்கசாமி: அப்படியெல்லாம் இதுவரை புதுச்சேரிக்கு எந்த தொழிற்சாலையும் வரவில்லை. நமது மாநில எல்லையில் உள்ள தமிழக பகுதிகளான வானூர், இரும்பையில் பல தொழிற்சாலைகளை பார்க்க முடிகிறது. அதுவும் எவ்வளவு சீக்கிரத்தில் வருகிறது. அந்த அளவிற்கு அவர்களுக்கு உள்ள அதிகாரம் தான் முக்கிய காரணம். தமிழக முதலமைச்சர் ஸ்டாலின் வெளிநாட்டுக்கு சென்று பல தொழில் முனைவோரை சந்தித்து தொழிற்சாலை துவங்க அழைப்பு விடுத்தார். அவர்களும் தமிழக முதலமைச்சரை நேரில் சென்று சந்திக்கின்றனர். உடனடியாக முடிவு எடுத்து அனுமதி அளிக்கின்றனர். அதனால், தமிழக எல்லைகளில் தொழிற்சாலைகள் வந்துள்ளன.

அப்போது திமுக எம்.எல்.ஏ.,க்கள் மேஜையை தட்டி ஆரவாரம் செய்தனர்.

முதலமைச்சர் ரங்கசாமி: ஆனால், இங்கு அது மாதிரி எந்த அதிகாரமும் முதலமைச்சருக்கு கிடையாது. அதாவது தமிழக முதலமைச்சருக்கு இருக்கும் அதிகாரம் எதுவும் எனக்கு இல்லை. இங்கு ஒரு தொழிற்சாலை துவங்க அனுமதி பெறுவது எவ்வளவு கடினமாக உள்ளது என எல்லோருக்கும் தெரியும். இதனால்தான் ஒற்றை சாளர முறையை கொண்டு வந்தோம். தொழிற்சாலைகள் துவங்கி விட்டு மூன்று மாதத்தில் அனுமதி பெறலாம் எனவும் கூறி இருந்தோம்.

நமது மாநிலத்தில் தொழிற்சாலைகளுக்கு சலுகை வழங்க மத்திய அரசின் அனுமதியை கேட்க வேண்டியுள்ளது. மின் இணைப்பு பெறவே தொழிலதிபர்கள் கஷ்டப்படுகின்றனர். இதற்கு அரசு நிர்வாகம் தான் காரணம். நமது மாநிலத்தில் தொழிற்சாலைக்கு சலுகைகள் அளிக்க, அனுமதி அளிக்க, மின்சார கட்டண சலுகை, வரி விலக்கு கூட நம்மால் முடிவெடுக்க முடியாது. மின்சார இணைப்பு கூட விரைந்து கொடுக்க முடியவில்லை என்பதுதான் உண்மை.

சபாநாயகர் செல்வம்: இதற்கெல்லாம் அதிகாரிகளின் செயல்பாடுகள் தான் காரணம்.

முதலமைச்சர் ரங்கசாமி: இதையெல்லாம் ஏன் சொல்கிறேன் என்றால், அரசு நிர்வாகம் அது மாதிரி தான் இருக்கிறது. தொழிற்சாலைகளை அனுமதிப்பது தொடர்பாக தலைமைச் செயலர் முடிவெடுத்தால் தான் அந்த கோப்பு நம்மிடம் வரும். இதனால் தான் மாநில அந்தஸ்து அவசியம் எனக் கேட்டு வருகிறோம். இதை எனக்காக நான் சொல்லவில்லை, கேட்கவில்லை. எதிர்காலத்தில் யார் வந்தாலும் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசுக்கு அதிகார வேண்டும் என்பதற்காக கேட்கிறோம்.

மாநில அந்தஸ்து பெறாவிட்டால், எத்தனை ஆண்டுகள் ஆனாலும், புதுச்சேரி பின்தங்கிய நிலையில் தான் இருக்கும். இதில் சந்தேகம் இல்லை.

மேலும் உறுப்பினர் அசோக்பாபு புதுவைக்கு எத்தனை பேரை தொழில் தொடங்க அழைத்து வந்தாலும், முதலமைச்சராக நான் அனுமதி கொடுக்கிறேன். இவ்வாறு விவாதம் நடந்தது.

# ரெட் கிராஸ் சார்பாக நலிந்த மக்களுக்கு உதவிப்பொருட்கள் வழங்கும் பணி



**திருவண்ணாமலை, மார்ச் 26-**

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் ரெட் கிராஸ் சார்பாக நலிந்த மக்களுக்கு உதவிப்பொருட்களை வழங்கும் பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் 500 நலிந்த குடும்பங்களுக்கு ரூ.40 லட்சத்தில் நிவாரண உதவிகள் வழங்கும் பணிகளை தொடங்கி வைத்தார்கள்.

திருவண்ணாமலை மாவட்டத்தில் உள்ள 500 நலிந்த குடும்பத்தினருக்கு உதவும் நோக்கத்தில் மாவட்ட ரெட் கிராஸ் சங்கம் சார்பில் ஒரு குடும்பத்திற்கு தலா ரூ.8,000 மதிப்பிலான அரிசி, பருப்பு வகைகள், எண்ணெய், சர்க்கரை, சமையல் பொருட்கள், போர்வை, சோப்பு வகைகள் போன்ற 19 வகையான அத்தியாவசிய பொருட்கள் 12 வட்டங்களை சார்ந்த பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது. நிவாரண பொருட்கள் அனைத்து வட்டாட்சியர்களிடம் ஒப்படைக்கப்பட்டு பயனாளிகளுக்கு வழங்கப்படவுள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்தில் கீழ்பென்னாத்தூர் வட்டத்தில் 50 பயனாளிகளுக்கும், தண்டராம்பட்டு வட்டத்தில் 42 பயனாளிகளுக்கும், செங்கம் வட்டத்தில் 58 பயனாளிகளுக்கும், கலசபாக்கம் வட்டத்தில் 12 பயனாளிகளுக்கும், போளூர் வட்டத்தில் 15 பயனாளிகளுக்கும், ஜமுனாமரத்தூர் வட்டத்தில் 15 பயனாளிகளுக்கும், திருவண்ணாமலை வட்டத்தில் 200 பயனாளிகளுக்கும், ஆரணி வட்டத்தில் 16 பயனாளிகளுக்கும், செய்யாறு வட்டத்தில் 38 பயனாளிகளுக்கும், சேத்துப்பட்டு வட்டத்தில் 15 பயனாளிகளுக்கும், வந்தவாசி வட்டத்தில் 20 பயனாளிகளுக்கும், வெம்பாக்கம் வட்டத்தில் 19 பயனாளிகளுக்கும் என மொத்தம் 500 பயனாளிகளுக்கு ரூ.40 லட்சம் மதிப்பிலான பொருட்கள் சம்பந்தப்பட்ட வட்டாட்சியர்களிடம் வழங்கப்பட்டுள்ளது. மேலும் அந்தந்த வட்டத்தை சார்ந்த பயனாளிகளுக்கு வட்டாட்சியர்கள் வாயிலாக நிவாரணப் பொருட்கள் வழங்கப்படும்.

இந்நிகழ்வில் மாவட்ட ரெட் கிராஸ் தலைவர் முனைவர் பா.இந்திரராஜன், மாவட்டத் துணைத் தலைவர் முனைவர் மு.மண்ணுலிங்கம், மாவட்டச் செயலர் என்.அழகப்பன்,

மாவட்டச் பொருளர் முனைவர். ஆர்.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர் உடனிருந்தனர்.

# சேலம் விம்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரி சார்பில் ரத்ததான முகாம்

**சேலம், மார்ச் 26-**

"சேலம் விம்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸஸ் கல்லூரி விநாயகா மிஷனின் விம்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் சார்பில் நிறுவனர் நினைவு நாளினை முன்னிட்டு ரத்ததான முகாம் நடந்தது.

விநாயகா மிஷன் பல்கலைக்கழகத்தின் விம்ஸ் அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியின் செஞ்சுருள் சங்க அமைப்பானது பல்கலைக்கழகத்தின நிறுவனர் டாக்டர்.சண்முகசுந்தரம் நினைவு நாளினை முன்னிட்டு ரத்த தான முகாமினை நடத்தியது. நிகழ்விற்கு கல்லூரியின் டீன் பேராசிரியர் டாக்டர் செந்தில்குமார் முன்னிலை வகித்தார். சிறப்பு விருந்தினராக சேலம் அரசு மோகன்



குமாரமங்கலம் மருத்துவமனையின் இரத்த வங்கி அதிகாரி டாக்டர் ரவீந்திரன் கலந்துகொண்டார். இதில் துறையை சேர்ந்த மாணவ, மாணவிகள், பேராசிரியர்கள் என சுமார் 70 பேர் ரத்த தானம் வழங்கினர். பெறப்பட்ட ரத்த தானமானது அரசு மருத்துவமனைக்கு வழங்கப்பட்டது. இதற்கான அனைத்து ஏற்பாட்டினையும் செஞ்சுருள் சங்க ஒருங்கிணைப்பாளர்கள் முனைவர் கிருத்திகா மற்றும் அல்போன்ஸ் ஆகியோர் செய்திருந்தனர்.

# மின் கட்டண ரசீதை குறிப்பிட்ட காலக்கெடுவிற்குள் வழங்க வேண்டும்

## வி.பி.ராமலிங்கம் எம்எல்ஏ வேண்டுகோள்

**புதுச்சேரி, மார்ச் 26-**

புதுச்சேரி சட்டப்பேரவையில் இன்று பூஜ்ய நேரத்தின் போது பாஜக சட்டமன்ற உறுப்பினர் வி.பி.ராமலிங்கம் பேசியதாவது, புதுச்சேரி மின் துறையில் பல்வேறு குளறுபடிகள் தொடர்கதையாக உள்ளதாக பொதுமக்கள் வருத்தம் தெரிவிக்கின்றனர். குறிப்பாக சரியான தேதியில் பயனாளிகளுக்கு பில் வழங்கப்படுவதில்லை. இதனால் ஸ்லாப் சிஸ்டம் மாறி விடுவதால் கூடுதலாக கட்டணம் செலுத்த வேண்டிய சூழ்நிலை ஏற்படுகிறது. இதனை தவிர்க்கும் வகையில் குறிப்பிட்ட தேதியில் அந்தந்த பகுதியில் உள்ள மீட்டர் ரீடர்கள் குறிப்பிட்ட காலக்கெடுவுக்குள் பில்களை வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும். மின் துறை ரசீதை பயனாளிகளுக்கு செல்போனில் வழங்குவதால் குறிப்பிட்ட காலத்திற்குள் பயனாளிகள் துறைக்கு செலுத்த வேண்டிய வரியை செலுத்த முடியும். இதனால் அபராத கட்டணம் தவிர்க்கப்படும். முக்கியமாக தொழிற்சாலைகளுக்கு பொருந்தும் சில



விஷயங்கள் வீட்டில் உள்ளோருக்கு வழங்கும் மின் கட்டண ரசீதுகளில் வழங்கப்படுவதால் அதிக அளவில் கட்டணம் வசூல் செய்யப்படுகிறது. இதனை அரசு முறைப்படுத்தி கண்காணிக்க வேண்டும். இவ்வாறு அவர் பேசினார்.

# செஞ்சி ஊராட்சி ஒன்றியத்தில் வளர்ச்சி திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து ஆட்சியர் ஆய்வு



**செஞ்சி, மார்ச் 26-**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், கொணலூர் ஊராட்சி, கோணை ஊராட்சி, சிட்டாம்பூண்டி ஊராட்சி ஆகிய பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சித் திட்டப்பணிகளின் முன்னேற்றம் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், பார்வையிட்டு, ஆய்வு செய்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவிக்கையில், செஞ்சி ஊராட்சி ஒன்றியம், கொணலூர் ஊராட்சியில், 19 நபர்களுக்கு இலவச வீட்டுமனைப்பட்டா வழங்குவது தொடர்பாக, சம்மந்தப்பட்ட நபர்களின் வசிப்பிடத்திற்கு நேரில் சென்று உண்மைத்தன்மை குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேலும், அப்பகுதியில், 30000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைத் நீர்த்தேக்கத் தொட்டி முறையாக பராமரிக்கப்பட்டு வருகிறதா என்பது குறித்து நேரில் ஆய்வு மேற்கொண்டு, மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி பராமரிப்பாளரிடம் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி சுத்தம் செய்யும் நாட்கள், சுகாதாரமான குடிநீர் வழங்கிடும் வகையில், குளோரினேஷன் செய்யப்படும் நாட்கள் குறித்து கேட்டறிந்ததுடன், இது தொடர்பாக பொதுமக்கள் அறிந்திடும் வகையில், தகவலினை எழுதி வைத்திட வேண்டும். அவ்வப்பொழுது மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டியினை தூய்மைப்படுத்தி சுகாதாரமான குடிநீர் விநியோகம் செய்திட வேண்டும் என அறிவுறுத்தப்பட்டது. மேலும், கலைஞர் கனவு இல்லம் திட்டத்தின்கீழ், பயனாளிகள் வீடு கட்டி வருவதை நேரில் பார்வையிட்டதுடன், அரசு வழங்கிய வழிகாட்டு நெறிமுறைகளின்படி குடியிருப்பு வீடுகள் கட்டப்பட்டுள்ளதா என்பது குறித்து ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

அதே பகுதியில், பொதுமக்களின் கோரிக்கையின் அடிப்படையில், புதிய நியாய விலைக்கடை அமைப்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதுமட்டுமல்லாமல், 15வது மாநில நிதிக்குழு திட்டத்தின்கீழ், ரூ.5.10 லட்சம் மதிப்பீட்டில் வீட்டுக்கொரு குழாய் அமைத்துள்ளதை நேரில் பார்வையிட்டு, பொதுமக்களிடம் நாள்தோறும் சுகாதாரமான குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறதா என்பது குறித்து கேட்டறியப்பட்டது. மேலும், இப்பகுதியில் உள்ள அங்கன்வாடி கட்டிடம் மற்றும் ஊராட்சி மன்ற தலைவர் அலுவலக கட்டிடம் புனரமைப்பது தொடர்பாக ஆய்வு மேற்கொள்ளப்பட்டது.

இதனைத் தொடர்ந்து, கோணை ஊராட்சி, காட்டுக்கொள்ளை குக்கிராமத்தில், பி.எம்.ஜன்மன் திட்டத்தின்கீழ், தலா ரூ.5.07 லட்சம் வீதம் 11 பயனாளிகளில் 9 பயனாளிகள் முழுமையாக வீடு கட்டி முடித்துள்ளதையும், 2 பயனாளிகளின் வீடுகள் பூச்சு வேலை நடைபெற்று வருவதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. தொடர்ந்து, செஞ்சி ஊராட்சி ஒன்றியம், சிட்டாம்பூண்டி ஊராட்சியல், ரூ.13.71 கோடி மதிப்பீட்டில் செஞ்சி அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி கட்டிடம் கட்டப்பட்டு வருவதை நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இக்கல்லூரி கட்டடம் சுமார் 49593.00 சதுர அடிவருகிறது. இப்புதிய அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியின் கட்டடத்தின் தரைத்தளத்தில் 2 வகுப்பறைகள், 1ஆய்வகம், 1நூலகம், முதல்வர் அறை, மாணவர் பயன்பாட்டு அறை, துறைத்தலைவர் அறை, மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு தனித்தனியே கழிவறைகள் வசதிகளுடன் கட்டப்படவுள்ளது.


மேலும் முதல் தளத்தில் 6 வகுப்பறைகள், 2ஆய்வகம், கருத்தரங்கம், துறைத்தலைவர் அறை, பணியாளர்கள் அறை, மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு தனித்தனியே கழிவறைகள் வசதி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இரண்டாம் தளத்தில் 6வகுப்பறைகள், 3ஆய்வகம், உடற்கல்வி இயக்குநர் அறை, 2 பணியாளர்கள் அறை, மாணவர் மற்றும் மாணவியர்களுக்கு தனித்தனியே கழிவறைகள் வசதி செய்யப்பட்டு வருகிறது.

மேலும் சுத்திகரிக்கப்பட்ட குடிநீர் வசதி, மாற்றுத் திறனாளிகளுக்கான சாய்தள வசதி ஸிஙீனீஜ், ஆழ்துளைக் கிணறு, 30,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட கீழ் நிலை நீர் தேக்கதொட்டி, 25,000 லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலைநீர் தேக்க தொட்டிகள், தீயணைப்பு சாதன வசதி மற்றும் அணுகு சாலை ஆகிய வசதிகள் மேற்கொள்ளப்பட்டு வருகிறது என மாவட்ட ஆட்சித்தலைவர் ஷே.ஷேக் அப்துல் ரஹ்மான், தெரிவித்தார்.

ஆய்வின்போது, பொதுப்பணித்துறை தொழில்நுட்பம் உதவி செயற்பொறியாளர் மகேஷ்பாபு, செஞ்சி வருவாய் வட்டாட்சியர் ஏழுமலை, செஞ்சி வட்டார வளர்ச்சி அலுவலர்கள் நடராஜன், பிரபா சங்கர், கொணலூர் ஊராட்சி மன்ற தலைவர் சுபா குமார் உட்பட துறை சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

## முதலமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர் ராஜினாமா செய்ய வேண்டும்

### புதுச்சேரி முன்னாள் அமைச்சர் வலியுறுத்தல்



**காரைக்கால், மார்ச் 26-**

புதுச்சேரி தலைமைப் பொறியாளரே லஞ்ச வழக்கில் சிக்கியதற்கு தார்மிக பொறுப்பேற்று முதலமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர் ராஜிநாமா செய்யவேண்டும். என புதுச்சேரி முன்னாள் அமைச்சர் கமலக்கண்ணன் வலியுறுத்தியுள்ளார்.

புதுச்சேரி முன்னாள் வேளாண்துறை அமைச்சர் கமலக்கண்ணன் இதுகுறித்து நேற்று நிருபர்களிடம் கூறியதாவது: புதுச்சேரி என் ஆர் காங்கிரஸ், பாஜனதா கூட்டணி ஆட்சியில், மக்கள் விரோத செயல்கள் அதிகரித்து வருகின்றன குறிப்பாக, அனைத்து துறைகளிலும் லஞ்சம் தலைவிரித்து ஆடுவதாக தொடர்ந்து புகார்கள் வந்த வண்ணம் உள்ளது. கடந்த சில தினங்களுக்கு முன்பு, புதுச்சேரி பொதுப்பணித்துறை தலைமைப் பொறியாளர், செயற்பொறியாளர் ஆகியோர் லஞ்ச வழக்கில் காரைக்காலில் கைது செய்யப்பட்டுள்ளனர். தலைமைப் பொறியாளரே லஞ்ச வழக்கில் சிக்குகிறார் என்றால், இதில் ஆட்சியாளர்களுக்கு தொடர்பில்லாமல் இருக்க வாய்ப்பில்லை. எனவே இதற்கு தார்மிக பொறுப்பேற்று முதலமைச்சர், பொதுப்பணித்துறை அமைச்சர் ஆகியோர் உடனே ராஜிநாமா செய்ய வேண்டும். இது இல்லாமல் அரசு ஆஸ்பத்திரியில் சொற்ப காலங்களில் காலாவதியாக கூடிய மருந்துகளை வாங்குவதில் ஊழல், ரெஸ்டோபர் அமைக்க உரிமை வழங்குவதில் ஊழல் என பல்வேறு அரசுத் துறைகளில் ஊழல் தலைவிரித்து ஆடுகிறது. புதுச்சேரி கவர்னர் கைலாஷ்நாதன் நேர்மையானவர் என தகவல்கள் வெளிவரும் நிலையில், இதுபோன்ற விவகாரங்கள் மீது அவர் தலையிட்டு, தவறு செய்வோரை தண்டிக்கும் வகையில், தலைமைச் செயலர் மூலம் உரிய நடவடிக்கை உடனே எடுக்க வேண்டும். என்றார்,

## கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளையணி விழா



**திருவெண்ணைய் நல்லூர், மார்ச் 26-**

விழுப்புரம் மாவட்டம் திருவெண்ணைய் நல்லூரில் வனம் மற்றும் கதர் கிராம தொழில் துறை அமைச்சர் முனைவர் பொன்முடி ஆலோசனையின்படி சமூக நலன் மற்றும் மகளிர் உரிமைத்துறை ஒருங்கிணைந்த குழந்தை வளர்ச்சி பணிகள் திட்டம் சார்பாக கர்ப்பிணி பெண்களுக்கு சமுதாய வளையணி விழா நடைபெற்றது.

இந்த நிகழ்வில் திருவெண்ணைய்நல்லூர் மேற்கு ஒன்றிய கழக செயலாளர் மாவட்ட கவுன்சிலருமான விசுவநாதன், ஒன்றிய குழு தலைவர் ஓம் சிவ சக்திவேல், பேரூராட்சி மன்ற தலைவர் அஞ்சுகம் கணேசன், குழந்தைகள் திட்ட அலுவலர் ராஜலட்சுமி, அரசு மருத்துவர்கள் அருள் ஜோதி, தமிழ்ச் செல்வி, வட்டார வளர்ச்சி அலுவலர் பாலசுப்பிரமணியன், பேரூராட்சி மன்ற உறுப்பினர் அம்சவள்ளி ராஜேந்திரன் உட்பட பலர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

## மாடு மோதி முதியவர் பலி

**காரைக்கால் மார்ச் 26-**

காரைக்காலில் மோட்டார் சைக்கிளில் சென்ற முதியவர் மீது திடீரென குறுக்கே வந்த மாடு மோதி முதியவர் இரண்டு வாரமாக சிகிச்சை பெற்று சிகிச்சை பலனின்றி பலியானார். காரைக்காலில் மாடுகளால் விபத்துகள் தொடர்வதால் மாடுகளை கட்டுப்படுத்த மாவட்ட நிர்வாகத்திற்கு சமூக ஆர்வலர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

காரைக்கால் நேரு நகர் வீட்டு வசதி வாரிய குடியிருப்பு பகுதியில் வசித்து வந்தவர் விஜயகுமார் (72). இவர் தனியார் நிறுவனத்தில் டிரைவராக பணிபுரிந்து வந்தார். இவருக்கு இந்திரா என்ற மனைவியும், கிருத்திகா மற்றும் ரம்யா ஆகிய இரு பெண் பிள்ளைகள் உள்ளனர். இவர் கடந்த 11ஆம் தேதி இரவு வேலை முடித்துவிட்டு, தனது மோட்டார் சைக்கிளில் வீடு திரும்பி கொண்டிருந்தார். அப்பொழுது காரைக்கால் காமராஜ் சாலை விரிவாக்கம் பகுதியில் சென்ற பொழுது, சாலையின் குறுக்கே திடீரென வந்த கருப்பு நிற மாட்டின் மீது விஜயகுமார் மோதியதில், மாடு விஜயகுமாரின் கழுத்தில் ஏறி ஓடியதாக கூறப்படுகிறது. இதில் தலை கழுத்தில் பலத்த காயமுற்ற விஜயகுமாரை, அங்கு இருந்தவர்கள் 108 ஆம்புலன்ஸ் மூலம் காரைக்கால் அரசு ஆஸ்பத்திரிக்கு அனுப்பி வைத்தனர். மேல் சிகிச்சைக்காக காரைக்கால் காமராஜ் சாலையில் உள்ள தனியார் மருத்துவமனையிலும், அங்கிருந்து தஞ்சாவூர் மற்றும் கோயம்புத்தூரில் உள்ள தனியார் ஆஸ்பத்திரிகளில் சிகிச்சை அளிக்கப்பட்டது. பின்னர் மீண்டும் காரைக்கால் கொண்டுவரப்பட்ட அவரை, மேல் சிகிச்சைக்காக கடந்த 18ஆம் தேதி சென்னை ராஜீவ் காந்தி அரசு பொது மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு சிகிச்சையில் இருந்த அவர், நேற்று அதிகாலை சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். இதுகுறித்து அவரது உறவினர் தியாகராஜன் என்பவர் காரைக்கால் போக்குவரத்து காவல் நிலையத்தில் புகார் அளித்தார். அதன்பேரில் போலீசார் இரண்டு பிரிவின் கீழ் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர். காரைக்காலில் சமீபகாலமாக சாலையில் திரியும் மாடுகளால் விபத்துகளும், அதனால் உயிரிழப்புகளும் அதிகரித்து வருவதால், சாலையில் திரியும் அனைத்து மாடுகளையும் போர்க்கால அடிப்படையில் எந்தவித நிபந்தனையும் இன்றி பிடித்து அப்புறப்படுத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வலியுறுத்தி உள்ளனர்.

## தமிழ்நாடு அரசின் சாதனைகள் புகைப்படக்கண்காட்சி



**சேலம், மார்ச் 26-**

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கோபாலபுரம் ஊராட்சி மன்ற திடலில் செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் அமைக்கப்பட்டிருந்த தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க சிறு புகைப் படக்கண்காட்சியினை பொதுமக்கள் பார்வையிட்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் தமிழ்நாடு மக்களின் நலனுக்காக எண்ணற்றத் திட்டங்களை அறிவித்துச் சிறப்பாகச் செயல்படுத்தி வருகின்றார்கள். தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகளைப் பொதுமக்கள் பார்த்துப் பயன்பெறும் வகையில், செய்தி மக்கள் தொடர்புத்துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்கப் புகைப்படக்கண்காட்சி நடத்தப்பட்டு வருகின்றன. அந்தவகையில், இன்றையதினம் சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியம், கோபாலபுரம் ஊராட்சி மன்ற திடலில் சேலம் மாவட்ட செய்தி மக்கள் தொடர்புத் துறையின் சார்பில் தமிழ்நாடு அரசின் திட்டங்கள் மற்றும் சாதனைகள் விளக்க சிறு புகைப்படக் கண்காட்சி நடத்தப்பட்டது.

தமிழ்நாடு முதலமைச்சரால் பல்வேறு துறைகளின் சார்பில் வழங்கப்பட்ட அரசு நலத்திட்ட உதவிகள், சுற்றுலாத்துறை அமைச்சர், பல்வேறு துறை சார்ந்த அமைச்சர் பெருமக்கள் கலந்து கொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள், மாவட்ட ஆட்சித்தலைவர், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், முக்கியப் பிரமுகர்கள் கலந்துகொண்ட நிகழ்ச்சிகளின் புகைப்படங்கள் போன்ற எண்ணற்ற நலத்திட்ட உதவிகள் உள்ளிட்ட பல்வேறு புகைப்படங்கள் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டிருந்தன. இக்கண்காட்சியினை ஏராளமான பொதுமக்கள் பார்வையிட்டு பயன்பெற்றனர்.

# மனுநீதி நாள் திட்ட முகாமில் பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவி



திருவண்ணாமலை, மார்ச் 26-

திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித்தலைவர் தர்ப்பகராஜ் சேத்துப்பட்டு வட்டம், கோழிப்புலியூர் ஊராட்சியில் உள்ள ஆர்டிஎஸ் திருமண மண்டபத்தில் நடைபெற்ற மனுநீதி நாள் திட்ட முகாமில் கலந்து கொண்டு பல்வேறு துறைகளின் சார்பாக பயனாளிகளுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

மனுநீதி நாள் முகாமில் தமிழ்நாடு அரசு சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விளக்கவுரை மாவட்ட அளவிலான அலுவலர்கள் வாயிலாக பொதுமக்களிடம் எடுத்துரைக்கப்பட்டது. மேலும் இன்றையதினம் சேத்துபட்டு வட்டத்தில் கோழிப்புலியூர் மற்றும் ஏந்தல் ஊராட்சியை சார்ந்த பொதுமக்கள் பயன்பெறும் வகையில் நடைபெற்ற இச்சிறப்பு மனுநீதி நாள் திட்ட முகாமில் பல்வேறு துறை சார்ந்த கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித்தலைவர் பெற்றுக்கொண்டு, துறைச்சார்ந்த அலுவலர்கள் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள அறிவுறுத்தினார்கள்.

இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் சிறப்புரையாற்றியதாவது: மனுநீதி நாள் திட்ட முகாமின் முக்கிய நோக்கம் என்னவென்றால் பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை பெற்று அவற்றின் மீது உடனடி தீர்வு வழங்குவது மட்டுமின்றி, அரசின் சார்பாக செயல்படுத்தப்படும் பல்வேறு திட்டங்கள் குறித்து பொதுமக்கள் நேரடியாக அறிந்து கொள்ள செய்து அதன் மூலம் அவர்களைப் பயன்பெற செய்ய வேண்டும் என்பதாகும். அதன் அடிப்படையில் தமிழ்நாடு முதலமைச்சர் சீரிய வழிகாட்டுதலின்படி, அனைத்து மாவட்டங்களிலும் இம்முகாம் நடைபெற்று வருகிறது. அதன்படி இன்றையதினம் திருவண்ணாமலை மாவட்டத்தில், சேத்துபட்டு வட்டத்திற்குட்பட்ட இப்பகுதியில் இச்சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது. இம்முகாமில் அரசு துறைகளின் சார்பாக அமைக்கப்பட்டுள்ள திட்ட விளக்க கண்காட்சிகள் மூலமாக திட்டங்கள் குறித்து அறிந்துகொண்டு பயனடைய வேண்டும். அங்கன்வாடி மையங்களில் உள்ள குழந்தைகளின் உடல் ஆரோக்கியத்தை மேம்படுத்திடும் பொருட்டு பொது சுகாதாரத்துறை சார்பாக தொடர் பரிசோதனைகள் மற்றும் தேவையான மருந்துகள் வழங்கப்பட்டு வருகிறது. அதேப்போன்று கர்ப்பிணி தாய்மார்களின் உடல் நலம் மற்றும் ஆரோக்கியம் குறித்தும், தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு தேவையான மருந்து மாத்திரைகள் மற்றும் மருத்துவ ஆலோசனைகள் உடனுக்குடன் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு முதலமைச்சர் பெண் குழந்தைகள் கல்வி கற்க வேண்டும், பெண்கள் உயர்ந்த இலக்கை அடைய வேண்டும் என்று நோக்கத்திற்காக பல்வேறு சிறப்பு திட்டங்களை செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக பெண் குழந்தைகளின் உயர்கல்வியை உறுதி செய்வதற்காக புதுமைப்பெண் திட்டம் என்ற சிறப்பான திட்டத்தை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். பெண் குழந்தைகள் கல்வி இடை நிற்றல் ஏற்படுவதற்கான காரணத்தை அறிந்தால், நமது சமூகத்தில் குறைந்த வயதில் அவர்களுக்கு திருமணம் செய்து வைப்பதே ஆகும். பெண்களுக்கு குறிப்பிட்ட வயதுக்கு மேல் தான் திருமணம் செய்ய வேண்டும். அவர்களுக்கு குறைந்த வயதில் திருமணம் செய்வதால் அவர்களின் உடல் ஆரோக்கியம் பாதிக்கப்படும் மற்றும் உயர்கல்வி தடைப்படும். கல்வி மற்றும் கல்வி சார்ந்த ஆளுமைதான் பெண் குழந்தைகளின் எதிர்கால வாழ்க்கையை உறுதி செய்யும். சமூக பொருளாதாரம் மேம்படும். ஆகவே பெண்களைப் படிக்க வைப்பது நமது முக்கிய கடமையாகும். எனவே பெண் கல்வியை ஊக்குவிப்பதற்கு பொதுமக்கள் அனைவரும் அரசுக்கு முழு ஒத்துழைப்பு அளித்து, அரசின் சார்பாக செயல்படுத்தப்படும் திட்டங்களை அறிந்து அனைவரும் அதன் மூலம் பயன்பெற வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள்.

இம்முகாமில் வருவாய்த்துறை சார்பாக 89 பயனாளிகளுக்கு ரூபாய் 44 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் இலவச வீட்டுமனை பட்டாக்கான ஆணைகளையும், 68 பயனாளிகளுக்கு பட்டா மாற்றத்திற்கான ஆணைகளையும், 10 பயனாளிகளுக்கு சான்றிதழ்களும், 19 பயனாளிகளுக்கு ரூபாய் 1 லட்சம் மதிப்பில் புதிய குடும்ப அட்டைகளையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் 38 பயனாளிகளுக்கு ரூபாய் 6 லட்சத்து 82 ஆயிரத்து 500 மதிப்பில் நலத்திட்ட உதவிகளும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை சார்பாக 10 பயனாளிகளுக்கு ரூபாய் 20 ஆயிரம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளும், வேளாண்மைத்துறை சார்பாக 10 பயனாளிகளுக்கு ரூபாய் 22 ஆயிரத்து 300 மதிப்பில் வேளாண் இடுப்பொருட்களும், தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறை சார்பாக 3 பயனாளிகளுக்கு ரூபாய் 35 ஆயிரத்து 106 மதிப்பில் வேளாண் பொருட்களும், மகளிர் திட்டம் சார்பாக 8 மகளிர் சுய உதவிக்குழுக்களுக்கு ரூபாய் 9 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பில் கடனுதவிக்கான ஆணைகள் என மொத்தம் 255 பயனாளிகளுக்கு ரூபாய் 62 லட்சத்து 59 ஆயிரத்து 906 மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை வழங்கினார்கள்.

முன்னதாக பல்வேறு துறைகளின் சார்பில் செயல்படுத்தப்படும் திட்டங்கள் குறித்த விளக்க கண்காட்சியினை மாவட்ட ஆட்சித்தலைவர் பார்வையிட்டார்கள். மேலும் கோயம்புத்தூர் மாவட்டத்தில் நடைபெற்ற கேலோ இந்தியா ஊஷ் பெண்கள் போட்டியில் கலந்துகொண்டு தங்கம் வென்ற பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியம், கோழிப்புலியூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியைச் சார்ந்த 8ம் வகுப்பு மாணவி செல்வி சன்மதி இன்றையதினம் நடைபெற்ற மனுநீதி நாள் திட்ட முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களிடம் காண்பித்து வாழ்த்து பெற்றார்.

தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் சேத்துப்பட்டு ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பாக மேற்கொள்ளப்பட்டு வரும் வளர்ச்சி திட்டப்பணிகளை ஆய்வு மேற்கொண்டு, முக்கிய திட்டப் பணிகளான சாலைப்பணிகள், குடிநீர் பணிகள் உள்ளிட்ட பணிகளை துரிதமாக முடிக்க ஊரக வளர்ச்சி துறைச்சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள். மேலும் சேத்துப்பட்டு வட்டாட்சியர் அலுவலகத்தில் ஆய்வு மேற்கொண்டு பட்டா மாற்றம் மற்றும் பொதுமக்கள் அளிக்கும் கோரிக்கை மனுக்கள் மீது விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளவும் துறைச்சார்ந்த அலுவலர்களுக்கு அறிவுறுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் ராம்பிரதீபன், செய்யாறு சார் ஆட்சியர் பல்லவி வர்மா, ஆரணி வருவாய் கோட்டாட்சியர் (பொ) ராமகிருஷ்ணன், மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை செயற்பொறியாளர் (ஊரக வளர்ச்சி) இளங்கோ, செய்யார் உதவி இயக்குநர் (ஊராட்சிகள்) வேல்முருகன், மாவட்ட பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் சிவா, பழங்குடியினர் நல திட்ட அலுவலர் கலைசெல்வி, சேத்பட் வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர் மற்றும் அரசு துறைச்சார்ந்த அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# காமராஜர் கல்வீடு கட்டும் திட்டம் மத்திய அரசின் பங்களிப்புடன் ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும்

## சட்டப்பேரவையில் அமைச்சர் திருமுருகன் அறிவிப்பு



புதுச்சேரி, மார்ச் 26-

'காமராசர் பிரதமர் ஒருங்கிணைக்கப்பட்ட வீடு கட்டும் திட்டம் என்ற பெயரில் புதிய திட்டம் செயல்படுத்தப்பட்டு ரூ.5 லட்சம் வழங்கப்படும். இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும்' என, அமைச்சர் திருமுருகன் தெரிவித்தார்.

புதுவை சட்டசபையில் மானிய கோரிக்கை மீதான விவாதத்திற்கு குடிமை பொருள் வழங்கல் துறை அமைச்சர் திருமுருகன் பதில் அளித்து பேசியதாவது, அனைத்து நூலகங்களும் டிஜிட்டல் மயமாக்கப்படும். முதல் கட்டமாக அரசு கட்டிடங்களில் இயங்கும் நூலகங்கள் மட்டும் உடனடியாக டிஜிட்டல் மயமாக்கப்படும். 25 இளநிலை நூலக தகவல் உதவியாளர்களை போட்டித் தேர்வு மூலம் தேர்வு செய்ய பணியாளர் மற்றும் நிர்வாக சீர்திருத்த துறைக்கு கோப்பு அனுப்பப்பட்டுள்ளது.

2025– 26ம் நிதியாண்டில் கலைமாமணி, தமிழ்மாமணி விருதுகள் வழங்கப்படும். இதில் புதிதாக புகைப்படக்கலை, பேச்சுக்கலை சேர்க்கப்பட உள்ளது.

காரைக்கால் அம்மையார் பெயரில் இயல், இசை, நாடகப் பிரிவில் விருது வழங்கப்படும். காரைக்கால் பழைய நீதிமன்ற வளாகத்தில் அருங்காட்சியகம் அமைக்கப்படும். காரைக்கால் நகர் பகுதியில் அனைத்து வசதிகளும் கூடிய கலையரங்கம் அமைக்கப்படும்.

காரைக்கால் மாவட்ட மாணவ மாணவிகள் போட்டித் தேர்வுகளில் தேர்ச்சி பெற ஏதுவாக காரைக்கால் நேரு நகர் பகுதியில் அதிநவீன பயிற்சி வகுப்பறைகள் கூடிய டிஜிட்டல் லைப்ரரி கட்டப்படும். கலை மாமணி, தமிழ் மாமணி விருதாளர்களுக்கு விருது தொகையை உயர்த்தி வழங்கவும், அவர்களுக்கு ஈமச்சடங்கு நிதி அளிக்கவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

குடிசை மாற்று வாரியம் மூலம் காமராஜர் வீடு கட்டும் திட்டத்தில் வீடு கட்ட தவறியவர்கள் மற்றும் வீடு கட்டி முடிக்க முடியாத பயனாளிகளிடமிருந்து அசல் தொகையை மட்டும் பெற்றுக் கொண்டு பத்திரங்களை திருப்பி அளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதனால் 8,638 குடும்பங்கள் பயன்பெறுவர்.

காமராசர் கல்வீடு கட்டும் திட்டம் மற்றும் பிரதம மந்திரி ஆவாஸ் யோஜனா இவை இரண்டும் ஒருங்கிணைக்கப்பட்டு மாநில அரசின் பங்காக ரூ. 2.75 லட்சம், மத்திய அரசின் பங்காக ரூ. 2.25 லட்சமாக மொத்தம் ரூ.5 லட்சம் காமராசர் பிரதமர் ஒருங்கிணைக்கப்பட்ட வீடு கட்டும் திட்டம் என்ற பெயரில் புதிய திட்டம் செயல்படுத்தப்படும். இதற்கான அரசாணை விரைவில் வெளியிடப்படும்.

சிவப்பு அட்டை தவிர மற்ற ரேஷன் கார்டுகள் தொடர்பான அனைத்து தேவைகளும் பொது சேவை மையம் மூலம் ஏப்ரல் மாதம் முதல் பயன்பாட்டிற்கு வரும். அனைத்து ரேஷன் கடைகளிலும் பாயிண்ட் ஆப் சேல் மெஷின் மற்றும் பயோமெட்ரிக் டிவைஸ் உபகரணம் பொருத்தப்படும். ரேஷன் கடைகளில் பொருட்கள் கையாளும் கட்டணம் கிலோவுக்கு 90 பைசாவிலிருந்து ரூ.1.80 ஆக உயர்த்தி ஏப்ரல் மாதம் முதல் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் ஊழியர்கள் சம்பளம், ரேஷன் கடை வாடகை, மின் கட்டணம், பராமரிப்பு செலவுகள் சரி செய்யப்படும். ரேஷன் அரிசி அந்தந்த மாதத்தில் வழங்கி முடிக்க விதிமுறைகள் உருவாக்கி உள்ளோம். புழக்கத்தில் உள்ள குடும்ப அட்டைகளுக்கு பதிலாக புதிய குடும்ப அட்டைகள் புத்தக வடிவில் விரைவில் வழங்கப்படும். தகுதி வாய்ந்த அனைத்து சிவப்பு, மஞ்சள் குடும்ப அட்டைகளுக்கு இரண்டு கிலோ கோதுமை விரைவில் வழங்கப்படும்.

வீட்டு வசதி வாரியத்திற்கு சொந்தமான ஒரு சில இடங்களை மட்டுமே தேர்வு செய்து இஆக்ஷன் மூலம் விற்பனை செய்யும் பட்சத்தில் ஒரு பெரும் தொகை முதலீடாக உருவாக்கி, வீட்டு வசதி வாரியத்தை சிறப்பாக செயல்பாட்டிற்கு கொண்டு வர உள்ளது. அனைத்து பிரச்சினைகளும் தீர்க்கப்பட்டு வீட்டு வசதி வாரியம் சிறப்பாக செயல்பாட்டிற்கு கொண்டு வரப்படும். இவ்வாறு அவர் பதில் அளித்தார்.

# மகளிர் பல்வகை உணவுப்பொருட்கள் தயாரிப்பு நிலையம் திறப்பு



கன்னியாகுமரி, மார்ச் 26-

தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமை செயலகத்திலிருந்து தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) திருநெல்வேலி வாயிலாக கன்னியாகுமரி மாவட்டம் கோவளம் பகுதியில் உள்ள பொது உபயோக மையத்தில் மகளிர் பல்வகை உணவுப்பொருட்கள் தயாரிப்பு நிலையத்தினை காணொலி காட்சி வாயிலாக திறந்து வைத்ததைத்தொடர்ந்து, மாவட்ட ஆட்சித்தலைவர் அழகுமீனா, குத்துவிளக்கேற்றி தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்து பேசுகையில், தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமை செயலகத்திலிருந்து தமிழ்நாடு சிறுதொழில் வளர்ச்சி நிறுவனம் (சிட்கோ) திருநெல்வேலி வாயிலாக கன்னியாகுமரி மாவட்டம் கோவளம் பகுதியில் உள்ள பொது உபயோக மையத்தில் மகளிர் பல்வகை உணவுப்பொருட்கள் தயாரிப்பு நிலையத்தினை துவக்கி வைத்து சிறப்பித்துள்ளார்கள். கன்னியாகுமரி மாவட்டத்தை பொறுத்தவரை சிட்கோ மூலமாக கோணம் மற்றும் மார்த்தாண்டம் பகுதிகளில் தொழிற்பேட்டை மையம் இயக்கி வருகிறது. கோணம் தொழிற்பேட்டை 20.07 ஏக்கர் பரப்பளவில் 29 தொழில்மனைகளும் 18 தொழிற்கூடங்களும் உருவாக்கப்பட்டு அனைத்தும் தொழிற்முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்தொழிற்பேட்டையில் மீன்வலை தயாரிக்கும் தொழில் முக்கிய பங்கு வகிக்கிறது. மேலும் இங்கு மீன்வலை தயாரித்தல், ஸ்டீல் பேப்ரிகேசன், கையுறைகள் தயாரித்தல், பேப்ரிகேசன் ஓர்க் உள்ளிட்டவைகள் நடைபெற்று வருகிறது. மேலும் மார்த்தாண்டம் தொழிற்பேட்டை 7.50 ஏக்கர் பரப்பளவில் 8 தொழில்மனைகளும் 10 தொழிற்கூடங்களும் உருவாக்கப்பட்டு அனைத்தும் தொழிற்முனைவோருக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இத்தொழிற்பேட்டையில் முந்திரி சார்பான தொழில் முக்கிய பங்கு வகிக்கின்றது. மேலும் இங்கு மீன்வலை தயாரித்தல், முந்திரி பதப்படுத்துதல், அலுமினிய பாத்திரங்கள் உற்பத்தி, பேப்ரிகேசன் ஓர்க் போன்றவைகள் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

மேலும் இன்றைய தினம் தமிழ்நாடு முதலமைச்சரால் திறந்து வைக்கபட்ட பெண்கள் பலஉணவு தயாரிக்கும் கூடம் ரூ.6.5 கோடி மதிப்பு ஆகும். இவற்றில் மாநில அரசின் பங்களிப்பு ரூ.5.98 கோடி சிறப்பு நோக்க ஊர்தி பங்களிப்பு மற்றும் வங்கிக்கடன் ரூ.66.50 லட்சம் மகளிர் உணவு பல்பொருள் குழுமத்திற்கு முதற்கட்டமாக கட்டுமான பணிகள் முடிக்கப்படும். இக்குழுமத்தில் 29 சிறப்பு நோக்க ஊர்தியாளர்கள் உறுப்பினர்களாக உள்ளனர். இக்குழுமம் முற்றிலும் பெண்களால் செயல்படுத்தப்படவுள்ளது. இக்குழுமம் மூலம் நெல்லிக்காய், ஆரஞ்ச், தக்காளி, எலுமிச்சை, திராட்சை, மாம்பழம் ஆகியவற்றிலிருந்து பழச்சாறு மற்றும் தானிய வகை பிஸ்கட்களும் தயாரிக்கப்படுகிறது. குறிப்பாக முருங்கையை அடிப்படையாக கொண்டு பல உபபொருட்கள், தேன் நெல்லிக்காய், எலுமிச்சை ஊறுகாய், மாம்பழ ஊறுகாய், முந்திரி பிஸ்கெட், தினை கலவை, உலர் மீன், மீன் ஊறுகாய், இறால் ஊறுகாய், இறால் பொடி, மூலிகை பொடிகள், தேங்காய் எண்ணெய், கறிவேப்பிலை பொடி, லட்டுவகைள் உள்ளிட்ட பல்வேறு வகையான உணவுப்பொருட்கள் தயார் செய்வதற்காக 60 இயந்திரங்கள் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் இத்தயாரிப்பு பொருட்களை வெளிமாவட்டம், வெளிமாநிலம் மற்றும் வெளிநாடுகளுக்கு விரிவுப்படுத்தி, சந்தைப்படுத்தி வருமானம் ஈட்டுவதற்கான வழிவகைகள் குறித்து ஆராய்ந்து அதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். இவ்வாறு பேசினார்கள்.

நிகழ்ச்சியில் சிட்கோ கண்காணிப்பாளர் மாரியம்மாள், ஸ்டெல்லாமேரி சமுதாய கல்வி மேம்பாட்டு இயக்குநர் அருட்சகோதரி லிஸ்டர் அர்ச்சனா, உதவி இயக்குநர் அருட்சகோதரி லிஸ்டர் ஜின்சி, இல்லத்தலைவி அருட்சகோதரி லிஸ்டர் லீமா, டி.எம் சபை தலைவி அருட்சகோதரி ரோஸ் பிரான்சிஸ், துணைத்தலைவி அருட்சகோதரி லிஸ்டர் சோபி தெரேஸ், மகளிர் சுயஉதவிக்குழுவினர், தொழிலாளர்கள் உட்பட பலர் உள்ளார்கள்.

# நுகர்வோர் அமைப்பு காலாண்டு கூட்டம்





ஈரோடு, மார்ச் 26-

ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக கூட்டரங்கில் மாவட்ட வழங்கல் மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத்துறையின் சார்பில் 2024–2025ம் ஆண்டின் நுகர்வோர் அமைப்புகளுடனான நான்காம் நுகர்வோர் காலாண்டு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் ராஜ கோபால் சுன்கரா தலைமையில் நடைபெற்றது.

இக்கூட்டத்தில் ஈரோடு மாவட்டத்தில் பதிவு பெற்ற தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளைச் சார்ந்த பிரதிநிதிகள் கலந்துகொண்டு நுகர்வோர் நலம் தொடர்பான கருத்துக்கள் மற்றும் கோரிக்கைகளை தெரிவித்தனர். மேலும் ஏற்கனவே நடைபெற்ற மூன்றாம் நுகர்வோர் காலாண்டு கூட்டத்தில் நுகர்வோர் அமைப்புகளால் அளிக்கப்பட்ட கோரிக்கைகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பாக தெரிவிக்கப்பட்டது.

மேற்படி நான்காம் நுகர்வோர் காலாண்டு கூட்டத்தில் 15க்கு மேற்பட்ட தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் கலந்து கொண்டு 64 கோரிக்கைகள் தொடர்பாக மனுக்கள் அளித்தனர்.

மேலும், மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் அனைத்து துறையினரும் ஒவ்வொரு காலாண்டிற்கும் தன்னார்வ நுகர்வோர் அமைப்புகளுக்கான காலாண்டு கூட்டத்தினை கட்டாயம் நடத்திட வேண்டும் எனவும், அக்கூட்டத்தில் கலந்துகொண்டு தன்னார்வ நுகர்வோர் அமைப்புகள் தங்களது குறைகளை தெரிவித்து நிவர்த்தி செய்து கொள்ளுமாறும் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் சாந்த குமார், மாவட்ட வழங்கல் அலுவலர் ராம்குமார் உட்பட தொடர்புடைய துறை அலுவலர்கள் கலந்துகொண்டனர்.

# புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கு துணை தேர்வு வாரியம் அமைக்க வேண்டும்

## வைத்திலிங்கம் பேச்சு



புதுச்சேரி, மார்ச் 26-

பாராளுமன்ற விதி எண். 377இன் படி கீழ்கண்ட நோட்டீஸ் புதுச்சேரி பாராளுமன்ற மக்களவை உறுப்பினர் வைத்திலிங்கம் அவர்களால் மக்களவையில் 25.03.2025 அன்று சமர்ப்பிக்கப்பட்டது. அவையில் வைத்திலிங்கம் கூறியதாவது, தற்போதைய நிலையில், புதுச்சேரிக்கென தனி தேர்வு வாரியம் இல்லாத சூழலில், குரூப்கி, குரூப்ஙி பதவிகள் அனைத்தும் மத்திய தேர்வாணையத்தின் மூலமாக அகில இந்திய அளவில் விளம்பரப்படுத்தப்பட்டு தேர்வு செய்யப்படுகின்றார்கள். இதனால், புதுவை மக்களின் வேலை வாய்ப்பு பறிக்கப்படுகின்றது. நிறைய பணியிடங்களில் பிராந்திய மொழி அறியாத அதிகாரிகள் பல்வேறு நிலைகளில் நியமிக்கப்படுகின்றார்கள். இந்திய அரசியலமைப்புச் சட்டம் விதி எண் 315ன் படி அனைத்து மாநிலங்களிலும் தனி தேர்வாணையம் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், புதுச்சேரிக்கென தனி தேர்வாணையம் இல்லாத சூழ்நிலையில் மத்திய தேர்வாணையத்தின் மூலமாகத்தான் விரிவுரையாளர்களும் பள்ளி முதல்வர்களும் மருத்துவர்களும் நியமிக்கப்படுகின்றார்கள். புதுச்சேரிக்கென தனி தேர்வாணையம் இருக்கும் பட்சத்தில் பிராந்திய மொழி தெரிந்த அதிகாரிகளை நியமிக்க ஏதுவாக இருக்கும். இந்திய அரசியலமைப்புச் சட்டம் யூனியன் பிரதேசங்களில் தனித் தேர்வாணையம் அமைக்க வழிவகை செய்யாவிட்டாலும், தலைநகர் டில்லியில் தனி துணை தேர்வு வாரியம் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல, புதுச்சேரி யூனியன் பிரதேசத்திற்கென ஒரு தனி துணை தேர்வு வாரியம் அமைக்க மத்திய அரசை வலியுறுத்தி கேட்டுக்கொள்கிறேன்.

E-mail:maalaiexpresspdy@gmail.com
● புதன் ● மார்ச் 26, 2025
மாலை எக்ஸ்பிரஸ்

## மகாராஷ்டிராவில் தியாகப் பெருஞ்சுவர் அமைக்கும் பணி: சபாநாயகர் செல்வம் பங்கேற்பு



**புதுச்சேரி, மார்ச் 26-**

மகாராஷ்டிரா மாநிலத்தில் தியாகப் பெருஞ்சுவர் அமைக்கும் பணிக்கான பூமி பூஜை நிகழ்ச்சியில் புதுச்சேரி சபாநாயகர் செல்வம் பங்கேற்றார்.

மகாராஷ்டிரா மாநிலம், மும்பை மந்த்ராலயாவில் உள்ள மகாத்மா காந்தி பூங்காவில், பாரதத்தின் சுதந்திர பவள விழாவை முன்னிட்டு சுதந்திரத்திற்காக பாடுபட்ட தியாகிகளை போற்றும் வகையில் தியாகிகளின் பெயர் பொறித்த தியாகப் பெருஞ்சுவர் அமைக்கும் பணிக்கான பூமி பூஜை நடந்தது. நிகழ்ச்சிக்கு, மகாராஷ்டிரா கவர்னர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார். மகாராஷ்டிரா மாநில முதல்வர் தேவேந்திர பட்னாவிஸ், துணை முதல்வர் ஏக்நாத் ஷிண்டே, அஜித் பவார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்களாக புதுச்சேரி சபாநாயகர் செல்வம், மகாராஷ்டிரா சபாநாயகர் ராகுல் நர்வேக்கர், மேலவை தலைவர் ராம் ஷிண்டே ஆகியோர் கலந்துகொண்டனர்.

இதற்கான ஏற்பாடுகளை தியாகப் பெருஞ்சுவர் அமைக்கும் சக்ரா பவுண்டேசன் நிறுவன நிர்வாகிகள் செய்திருந்தனர்.

## பால் கொள்முதல் மையத்தின் செயல்பாடுகள் குறித்து ஆட்சியர் ஆய்வு



திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை வட்டம் ரெட்டியார்பட்டி பகுதியில் செயல்பட்டு வரும் மொத்த பால் கொள்முதல் மையத்தின் செயல்பாடுகள் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் சுகுமார் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள்.

## சங்கமம் கலை அறிவியல் கல்லூரி சார்பில் ரத்ததான முகாம்



**மேல்மலையனூர், மார்ச் 26-**

விழுப்புரம் மாவட்டம் செஞ்சி அடுத்த சங்கமம் கலை மற்றும் அறிவியல் கல்லூரி அண்ணமங்கலம் சார்பில் நாட்டு நலப்பணி திட்டம் மற்றும் வேலூர் சி.எம்.சி சார்பாக "ரத்த தான முகாம்" கல்லூரி மகாத்மா காந்தி கூட்டரங்கில் நடைபெற்றது. முகாமிற்கு கல்லூரித் தலைவர், அரசு வழக்கறிஞர் கிருஷ்ணன் தலைமை தாங்கினார். கல்லூரி துணைத்தலைவர் வழக்கறிஞர் பரமசிவம் முன்னிலை வகித்தார். கல்லூரி முதல்வர் முனைவர். ஹரிகுமார் அனைவரையும் வரவேற்றார். முகாமில் 100 க்கும் மேற்பட்ட மாணவர்கள் முன் வந்து இரத்த தானம் செய்தனர். முகாமில் சி.எம்.சி. மருத்துவர்கள், கல்லூரி துறைத்தலைவர்கள் மற்றும் உதவி பேராசிரியர்கள் கலந்து கொண்டனர். நாட்டு நலப்பணி திட்ட ஒருங்கிணைப் பாளர் (நிகழ்ச்சி) முகாமை தொடுத்து வழங்கினார், கல்லூரி நிர்வாக அறுவலர் விஜயபாஸ்கர் நிகழ்ச்சி ஏற்பாடுகளை செய்திருந்தார்.

## பட்டா வழங்கும் இடத்தில் ஆட்சியர் ஆய்வு



தூத்துக்குடி மாவட்டம் கோவில்பட்டி வட்டம் லிங்கம்பட்டி ஊராட்சி சமுத்துவபுரத்தில் 200 பயனாளிகளுக்கு இலவச பட்டா வழங்குதல் தொடர்பான இடத்தினை மாவட்ட ஆட்சித்தலைவர் இளம்பகவத் நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

## காரைக்கால் நல்லம்பல் அரசு நடுநிலைப் பள்ளியில் ஆண்டுவிழா

**காரைக்கால், மார்ச் 26-**

காரைக்கால் நல்லம்பல் அரசு நடுநிலைப் பள்ளியில் ஆண்டுவிழா விமரிசியாக நடைபெற்றது.

காரைக்கால் திருநள்ளாறை அடுத்த, நல்லம்பல் அரசு நடுநிலைப் பள்ளியில், நேற்று முன்தினம் மாலை ஆண்டுவிழா பள்ளி வளாகத்தில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. விழாவிற்கு, பள்ளியின் தலைமையாசிரியர் பத்மாவதி தலைமை தாங்கினார். மாவட்ட முதன்மைக் கல்வி அதிகாரி விஜயமோகனா சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு பேசுகையில், சிபிஎஸ்இ பாடத்திட்டத்தின் சிறப்பு பற்றியும், மாணவர்கள் தாய்மொழியோடு, ஆங்கிலத்தில் பேசவும் கற்றுக்கொள்ள வேண்டும் என்று கூறினார்.



தொடர்ந்து, நெய்வாச்சேரி அரசு தொடக்கப்பள்ளி தலைமையாசிரியர் உமாமகேஷ்வர், பெற்றோர் ஆசிரியர் சங்கத் தலைவர் பியுதீன், பள்ளி மேலாண்மைக் குழுவின் தலைவர் பரிமளா ஆகியோர் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். நிகழ்ச்சிகளை ஆசிரியர் வசந்தகுமார் ஒருங்கிணைத்தார்.

விழா நிகழ்ச்சிகளை ஆசிரியர்கள் தேவிபாலா, விமலாதேவி செல்வி ஆகியோர் நொகுந்து வழங்கினர். கல்வியிலும், விளையாட்டுப் போட்டிகளிலும் வெற்றிபெற்ற மாணவ மாணவிகளுக்கு பரிசுகள் வழங்கப்பட்டன. யோகா, சிலம்பம், பிரமிட், போன்ற சாகச நிகழ்ச்சியோடு, பல்வேறு ஆடல், பாடலுடன் கலை நிகச்சிகள் நடைபெற்றது. முன்னதாக பள்ளியின் 7ஆம் வகுப்பு மாணவி வினோதினி அனைவரையும் வரவேற்றார். இறுதியாக, பள்ளியின் ஆங்கில ஆசிரியை அனுஜா நன்றி கூறினார்.

## த.வெ.க சார்பில் பள்ளி மாணவிக்கு ஊக்கத்தொகை வழங்கல்



**மதுரை, மார்ச் 26-**

மதுரை கோரிப்பாளையம் பள்ளிவாசல் பகுதியில் ஈகை திருநாள் புனித ரமலான் பண்டிகையை முன்னிட்டு தமிழக வெற்றி கழகத்தின் மதுரை வடக்கு மாவட்டம் சார்பாக மாபெரும் ரமலான் தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சி மதுரை வடக்கு மாவட்ட செயலாளர் கல்லணை தலைமையிலும், கோரிப்பாளையம் பகுதி செயலாளர் ஜெயின் அலாவுதீன், 28வது வார்டு வட்டச் செயலாளர் சையது ஆகியோர் முன்னிலையில் இஸ்லாமியத்தை சார்ந்த 100க்கும் மேற்பட்ட ஏழை, எளிய மக்களுக்கு பலசரக்கு தொகுப்பு மற்றும் வேட்டி, சேலைகள் வழங்கப்பட்டது. மேலும் இந்நிகழ்வில் முனுச்சாலை பகுதியைச் சார்ந்த பள்ளி மாணவிக்கு படிப்பு ஊக்க தொகையாக 10 ஆயிரம் ரூபாய் ரொக்க பணத்தை த.வெ.க மதுரை வடக்கு மாவட்டம் சார்பாக வழங்கினார்கள். இந்நிகழ்வில் புறநகர் மாவட்ட செயலாளர் விஷால் கிருஷ்ணா, கோரிப்பாளையம் பகுதி பொருளாளர் பிலால், பகுதி இணைச் செயலாளர் சுலைமான், 27 வது வார்டு வட்டச் செயலாளர் சீனிவாசன், வட்ட பொருளாளர் மதன், யாசர், வரித், அழகர் மற்றும் கழகத்தின் பொறுப்பாளர்கள், உறுப்பினர்கள், தொண்டர்கள் என பலர் கலந்துகொண்டனர்.

## டோல்கேட் கட்டண உயர்வை திரும்பப் பெறவேண்டும்: திண்டுக்கல் முகமது ரிஜ்வான் கோரிக்கை

**ஒட்டன்சத்திரம், மார்ச் 26-**

சுங்கச்சாவடி (டோல் கேட்) கட்டண உயர்வை திரும்பப் பெறவேண்டுமென ஒன்றிய அரசுக்கு சர்வதேச மக்கள் உரிமைகள் கழகம் நிறுவனத்தலைவர் மற்றும் கழக பொதுச்செயலாளர் திண்டுக்கல் எஸ்.முகமது ரிஜ்வான் கோரிக்கை விடுத்துள்ளார்.

அக்கோரிக்கையில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது, நாட்டில் சுங்கச்சாவடிகளின் எண்ணிக்கை அதிகரித்துக்கொண்டே வருவதோடு கட்டண உயர்வும்அதிகரித்து வருவதால் வாகன ஓட்டிகள் மட்டுமின்றி சாமானிய மக்களும் பெரிய அளவில் பாதிப்புக்குள்ளாகி வருகின்றனர். ஒன்றிய அரசு வருகின்ற ஏப்ரல் முதல் டோல்கேட் கட்டண உயர்வை அமல்படுத்த முனைப்போடு செயல்பட்டு வருவது ஒட்டு மொத்த நாட்டு மக்களின் வயிற்றில் அடிக்கும் ஒரு இழிசெயலாகும். கார்பெட் கம்பெனி பயன்பெறும் வகையில் ஒவ்வொரு நாளும் கட்டண உயர்வை அதிகரித்து வருகிறது. டோல்கேட் கட்டண உயர்வால் பஸ்கட்டண உயர்வு, விண்ணை மூட்டும் விலைவாசி உயர்வு அதிகரித்து சாமானிய அடித்தட்டு மக்களின் வாழ்வாதார, பொருளாதார வீழ்ச்சியை ஏற்படுத்துகிறது. எனவே, ஒன்றிய அரசு பொதுமக்களின் நலன் கருதி டோல்கேட் கட்டண உயர்வை திரும்பப்பெற வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.



## சட்டசபையில் எதிரொலித்த அமித்ஷா-எடப்பாடி பழனிசாமி சந்திப்பு

**சென்னை, மார்ச் 26-**

தமிழக சட்டசபை தேர்தல் அடுத்த ஆண்டு நடைபெற உள்ளது. இதற்கான நடவடிக்கைகளில் அரசியல் கட்சிகள் ஈடுபட தொடங்கி விட்டன. இந்த நிலையில், தமிழ்நாடு அரசியலில் திடீர் திருப்பமாக டெல்லி சென்ற எடப்பாடி பழனிசாமி, மத்திய மந்திரி அமித்ஷாவை நேற்று இரவு சந்தித்து பேசினார். இதன் மூலம் மீண்டும் அதிமுகபாஜக இடையே கூட்டணி ஏற்படுமா? என்ற எதிர்பார்ப்பு நிலவியது.

இந்த நிலையில், அமித்ஷா–எடப்பாடி பழனிசாமி சந்திப்பு சட்டசபையிலும் எதிரொலித்தது. அதிமுக உறுப்பினர்களுக்கும், அமைச்சர்களுக்கும் இடையே காரசார விவாதம் நடந்தது.

அதிமுக உறுப்பினர் கடம்பூர் ராஜு: அதிமுக என்ற கட்சியே கணக்கு கேட்டதால்தான் ஆரம்பிக்கப்பட்டது. 2026ல் முடிக்க வேண்டியவர்களின் கணக்கை முடித்து, எங்கள் கணக்கை தொடங்குவோம்"

அமைச்சர் தங்கம் தென்னரசு: நீங்கள் சொல்வது சரிதான்... கணக்கு கேட்டு ஆரம்பித்த அதிமுக, இப்போது தப்புக் கணக்குதான் போடுகிறது."

அதிமுக உறுப்பினர் எஸ்.பி.வேலுமணி: எம்.ஜி.ஆர்., ஜெயலலிதா வழியில் எடப்பாடி பழனிசாமி போட்ட கணக்கு சரியாகத்தான் இருக்கும். கூட்டி கழித்து பார்த்தால் கணக்கு சரியாக இருக்கும்.

அமைச்சர் ஐ.பெரியசாமி: அண்ணாவையும் மறந்து விட்டீர்கள்.. அம்மாவையும் (ஜெயலலிதா) மறந்துவிட்டீர்கள். இவ்வாறு விவாதம் நடந்தது.

OWNER Dr.K.SAKTHIVEL. M.B.A., Ph.D., M.A., M.phil., (JMC) PRINTER I. MANOHARAN, PUBLISHER Dr.K.SAKTHIVEL PUBLISHED FROM No.159, First Floor, Mission St, Puducherry - 605 001 AND PRINTED FROM SENTHIL ANDAVAR OFFSET PRINTERS, No.5, THENGAITITTU ROAD, MUDALIYARPET, PUDUCHERRY - 605 005 . EDITOR Dr.K. SAKTHIVEL E-mail:maalaiexpresspdy@gmail.com, Website: www.maalaiexpress.com Ph : 0413-2226989, 9842335007

# மே் தேதி தமிழகம் வருகிறார் பிரதமர் மோடி





# தீயணைப்பு நிலையத்துக்கு புதிய கட்டிடம்-மு.க.ஸ்டாலின்

# செயின் பறிப்பு சம்பவங்களில் ஈடுபட்டவர் என்கவுன்டரில் சுட்டுக்கொலை


# மாலை எக்ஸ்பிரஸ்



Email: maalaiexpresspdy@gmail.com



Website: www.maalaiexpress.com

• 26-3-2025 புதன்கிழமை •பக்கம் 8 • ரூ.600 காசுகள்